கடவுள் துணை.

இராயபுரம் வித்துவான்,

வே. கி. நாராயணசாமிபிள்ளையவர்கள்

அவ்வவ்வமயங்களில் இயற்றிய

# செய்யுட்டிரட்டு.

இது

சென்னியம்பாக்கம்,

வரதபிள்ளை யவர்கள் புத்திரர்

சகநாதம்பிள்ளையவர்கள்

முயற்சியால்

சென்னை:

வெள்ளையநாடார் அச்சாபீசில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வசித்து௵ சித்திரைமீ.

1887.

# கையொப்பக்காரர்களின் பெயர்.

உ. சி. முனிசாமிபிள்ளை.
த. அ. தம்புசாமிபிள்ளை.
கெஞ்சி. ஆறுமுகசெட்டியார்.
தி. ஸ்ரீனிவாசநாயகர்.
வா. சண்முககிராமணியார்.
ஆ. பெ. வேலாயுதநாடார்.
பூ. அழகிரிசெட்டியார்.
ச. ச. அந்தோணியப்பநாயகர்.
ஈ. வெ. சுப்பராயமுதலியார்.
பெ. சிவராமநாயகர்.
கொ. பொன்னுசாமிமுதலியார்.
நா. செங்கல்வராயரெட்டியார்.
சி. அருணாசலமுதலியார்.
ச. பாலசுந்தரமுதலியார்.
சி. முருகேசமுதலியார்.
வே. கிருஷ்ணசாமிரெட்டியார்.
ர. மாணிக்கமுதலியார்.
ம. நாகப்பநாயகர்.

ஜே. சின்னசாமிபிள்ளை.
மு. இரத்தினவேலுநாயகர்.
பெ. சண்முகம்பிள்ளை.
அ. பங்காருராஜா.
இராகவலுநாயுடு.
தி. பொன்னுசாமிமுதலியார்.
கு. நாராயணராவ்.
ம. சிவராவ்.

பு. தில்லைநாயகர்.
பெ. ஜானகிராம்நாயுடு.
அ. ஆ. சென்னை: கேசவநாயுடு.
கே. சே. அப்புகுட்டிசெட்டியார்.
மு. கோவிந்துநாயகர்.
சா. மு. செங்கல்வராயசெட்டியார்.
ஆ. முனிசாமிநாயுடு.
அ. வீ. கேசவநாயுடு.
ஆ. இரங்கசாமிநாயுடு.
ஆ. எ. குப்பாஜிராவ்.
கே. ஜா. இராமாஞ்சுலுநாயுடு.
மா. தா. பார்த்தசாரதிராஜா.

தி. கோ. முனிசாமிசெட்டியார்.
கா. வி. சுப்பராயநாயகர்.
பு. தி. அருணாசலதம்[illegible]
சாமு. சின்ன[illegible]மிநாயுடு.
நா. ஆதிமூலநாயுடு.
இ. கு. நாராயணசாமிபிள்ளை.
இ. மு. முனிசாமிநாயகர்.
உ. வே. ஐயாதுரைநாயுடு.
மு. எ. முனிசாமிநாயகர்.
மு. வேலப்பசெட்டி.
க. வே. குப்புசாமிநாயகர்.
உ. வே. இரங்கசாமிநாயகர்.
சே. அ. இராகவசெட்டியார்.
வ. தி. முனிசாமிநாயகர்.
த. ம. இராமசாமிபிள்ளை.
ப. ச. ஆறுமுகமுதலியார்.
கே. ரா. பாப்பையநாயுடு.
கே. மு. இராகவநாயகர்.
எ. ந. முனிசாமிநாயுடு.
தா. ஈ. வேங்கடசாமிநாயுடு.
ஆ. வீரபத்திரமுதலியார்.
தி. பொன்னுசாமிநாயகர்.
பா. மு. சுப்பராயலுநாயுடு.
வீ. ஆறுமுகமுதலியார்.
தி. மு. முனிசாமிநாயுடு.
கோ. வீராசாமிநாயுடு.
ஓ. பா. வீரராகவலுநாயுடு.
சே. குப்புசாமிமுதலியார்.
ஆ. சி. சந்திரகுப்தபிள்ளை.
சு. கந்தசாமிபிள்ளை.
மு. இராமசாமிசெட்டியார்.
வே. முருகப்பமுதலியார்.
பா. நாராயணசாமிநாயகர்.
கா. பா. வேம்புலிசெட்டியார்.
உ. கி. கன்னசாமிநாயுடு.
பா. சுப்பராயலுநாயுடு.
வீ. நாராயணசாமிநாயுடு.
ம. சகநாதமுதலியார்.
கா. சுப்பராயநாயகர்.
க. ந. முத்தியாலு.

வீ. குருசாமிநாயகர்.
மு. முனிசாமிநாயுடு.
வே. சுந்தரநாயுடு.
ஆ. வ. சுப்பராயலுநாயுடு.
அ. ஏ. வேலாயுதநாயகர்.
தி. சு வையாபுரிமுதலியார்.
நா. கோவிந்தராஜநாயுடு.
ஆ. சின்னப்பதம்பிரான.
மு. சாமிநாதநாயகர்.
லாயிங். பாலாஜிசிங்.
சுப்பராயமுதலியார்.
க. மு. கிருஷ்ணசாமிநாயுடு.
தா. மா. மாரிமுத்துநாயகர்.
சே. வ. அப்பாயிநாயுடு.
ஆ. மு. லக்ஷ்மணநாயகர்.
ஆ. சி. வரதராஜலுநாயுடு.
கோ. தன்சிங்.
பா. தி. இரங்கசாமிமுதலியார்.
சி. இராமசாமிமுதலியார்.
பு. சுப்பராயமுதலியார்.
நே. குப்புசாமிமுதலியார்.
கு. பாலகிருஷ்ணமுதலியார்.
கு. இராமாஞ்சப்பமுதலியார்.
உ. மாணிக்கமுதலியார்.
சூ. வேலுமுதலியார்.
தோ. முனிசாமிமுதலியார்.
நாகை. இரங்கசாமிமுதலியார்.
கா. முனிசாமிநாயுடு.
உ. இராமசாமிநாயுடு.
பூ. ஆ. அப்பாயிநாயுடு.
பம்பல். இராமசாமிமுதலியார்.
வீ. குமாரசாமிநாயகர்.
இராஜுபிள்ளை.
முனிசாமிசெட்டி.
பு. வீ. வரதராசபிள்ளை.
சூ. கந்தசாமிமுதலியார்.
ஆ. மு. முனிசாமிநாயகர்.
ம. தா. நாராயணசாமிமுதலியார்.
ம. மு. ஆறுமுகநாயகர்.
வே. இராஜா.
நெ. மேகாவுஆசாரியார்.
பு. வேதாசலநாயகர்.
ஆ. இரங்கசாமிஆசாரியார்.
ந. முனிசாமிநாயகர்.
அ. குப்புசாமிஆசாரியார்.
முத்துக்குமாரசாமிநாயகர்.
குமாரசாமிநாயகர்.
இராமசாமிநாயகர்.
கோவிந்துமுதலியார்.
அமிர்தலிங்கமுதலியார்.
மா. மு. திருவேங்கடம்பிள்ளை.
கே. கி. இராமசாமிராஜா.
ஆ. எ. சுப்பாராவ்.
இலட்சுமணநாயகர்.
ரா. சேணிநாயகர்.
பொன்னப்பநாயகர்.
வெ. கந்தசாமிமுதலியார்.
முருகன்.
ஏழுமலைநாயகர்.
வரதராசுலுநாயுடு.
சதாசிவநாயகர்.
பெருமாள்.
வடிவேல்.
இராகவன்.
சரவணன்.
சென்னை கேசவநாயுடு.
முத்துசாமி.
சடையன்.
வே. மு. பா. இராமாஞ்சுலுநாயுடு.
பு. தி. வீரராகவபிள்ளை.
மே. தி. உலகநாதநாயகர்.
மை. குப்புசாமி.
மெ. செல்லப்பாசாரியார்.
கோனே. கன்னியப்பஆசாரியார்.
பெ. சின்னசாமி.
இ. முனிசாமி.
தி. பார்த்தசாரதிஆசாரியார்.
மெ. மு. ஆறுமுகபண்டாரம்.
அ. ராசநாயகர்.
கா. அருணகிரிஆசாரியார்.

Rev. T. K. Itty.
Mr. P. S. Soondrum.
,, A. R. Josiah.
,, R. Joseph.
,, Anthoneyappa Modeliar.

# சாத்துகவிகள்.

தஞ்சாவூர் சதாவதானம்,
ஸ்ரீமது
## சுப்பிரமணிய ஐயரவர்கள்.
இயற்றிய
அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

உலகமலர் வாய்ப்பெய்தான் வளர்குலத்தி லுதித்தவன்வே லூரில் வாணன், நலமலிசீர்க் கிருட்டினசா மிப்பெயரோன் றவத்துதித்த நாற்பாக் கல்வி, வலமிகுநா ராயணசா மிக்கவிஞ னொருசெயுட்கே மற்றோர் சொற்ற, பலசெயுளுந் தோற்றிருக்கப் பலசெய்யுட் டிரட்டிடந்தான் பகர்வ தென்னே.

---

சென்னைச் சருவகலாசாலைத் தமிழ்த்தலைமைப்
புலமை நடாத்திய இயற்றமிழாசிரியர்
## கோமளபுரம், இராசகோபாலபிள்ளை
அவர்க ளியற்றிய
அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மேலூர்சில் வகையாலு மொருசிறிதொப் பாகுமென விளம்பலாகா, வேலூர்வாழ் கிருஷ்ணசா மிக்குரிசில் புரிந்ததவம் விறவந்த, தாலூர்வண் புகழார்நா ராயணசா மிப்புலவன் றக்கோர் நாவின், பாலூர்செவ் வியசெய்யுட் டிரட்டொப்பா வொருநூலில் பகருங் காலே.

---

காஞ்சிபுரம் பிரபன்னவித்துவான்,
## இராமசாமிநாயுடு அவர்கள் இயற்றிய
கட்டளைக் கலித்துறை.

ஆந்தக விற்பல் லணிவிர வத்தொடுத் தார்வுமிகத்
தீந்தமி ழாகின்று செய்யுட் டிரட்டெனச் செப்பினறல்
பூந்து வரைப்பெரு மான்மர போங்கப் புவியிலிசை
வேய்ந்திடு நாரா யணசாமி விற்பனன் மேதினிக்கே.

---

தொண்டைமண்டல பாடசாலை இயற்றமிழ்ப் போதகாசிரியர்,

## தி. சண்முகம்பிள்ளை யவர்கள் இயற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மதுரமெனக் கழைப்பாகோர் முக்கனியென் றேசில்லோர் வகுப்ப ரீது, கதுமெனவன் றெனநிறுத்தக் கலயமுனி மதுர மெனக் கழற வன்றே, இதிரினருந் தமிழ்வகுத்தான் மற்றதனின் சொற்பொருளின் சார மெல்லாம், பொதுளநாரா யணசாமி மால்செய்யுட் டிரட்டென்னப் புனைந்தான் மன்னே.

---

சென்னை, கிரிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்புலவர்,

## சபாபதி முதலியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்பெறுமிவ் வுலகதனிற் பல்வளஞ்சேர் வேலைநகர் சிறந்து வாழும், பேர்பெறுநா ராயணசா மிக்கவிஞன் பலவமயம் பெற் றகாலைப், பார்புகழு மிலக்கணக்க ளஞ்சியமாங் குருவருளாற் பலரு மெச்ச, ஏர்பெறச்செய் கவியனைத்துந் திரட்டியொரு நூலாக வியற்றினனே.

நேரிசை வெண்பா.

பார்புகழும் வேலைப் பதியினிடை மேவிவளர்
பேர்பெறுநா ராயணசா மிப்பெரியோன் – ஏர்பெறச்செய்
பாடலனைத் துந்திரட்டிப் பாரில்பல ருங்களித்துத்
தேடவச்சி விட்டான் றெரிந்து.

---

திருவாவடுதுறை யாதீன வித்துவான்,

நாகை. த. ரா. ச.

## நடராஜப்பிள்ளை அவர்கள் இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

மாமேவு சென்னையம் பதிராய் புரமென்ன மன்னுநகர் தன் னில்வாழும், வைகுந்த நாதனருள் பெற்றுயர்ந் தோங்குகோ வைசியகுல திலகனுள்,தேமேவு தொடையலணி யகலனுயர் பெ ருமைநிறை செந்தமிழ்ச் சிந்துபருகிச்,செய்யகவி மாரியிவ் வை

யக மதிற்பெயுஞ் சீமுத மணியதிரன், நாமேவு கலைமகட் குறையு ளேயென்னுநா ராயணக் கவிஞனேதும், நன்மைதரு செய்யுட் டிரட்டெனும் பாமாலை நானிலத் தோர்கள் மகிழும், காமேவு கற்பகப் பூமாலை கண்ணன் கவுத்துவமணி மாலைதுளவக், கான் விசு பசியநற் றேமாலை பன்மணிக் கதிர்மாலை யென்னலாமே.

வேறு.

அந்நாளி லமரர்விருந் தருந்தவாரி கலியைமதித் தமுத மிந்த, பன்னகப் பாயுடையான் பரமைக்கோ பாலகுலப்பால னாகி, நன்னுவ லோர்புகழ்நா ராயணசா மிப்பெயரு நவிலப் பெ ற்றுச்,சொன்னான்செய் யுட்டிரட்டிவ் வுலகர்தமி ழமுதமிந்நாள் சுவைக்க வென்றே.

---

அரிச்சந்திர மகாராஜா கீர்த்தனை பாடிய

சிவகுருதாசரென்னும் காரணப்பெயரெய்திய

## வேங்கடாசல ஆசாரியரால் இயற்றிய

எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

ஆதவனேர் திகிரியினுற் கரியைக் காத்த
    வண்ணல்கிருஷ்ண சாமியெனும் பெயரோ னீன்ற
யாதவர்தங் குலதிலகன் வேலூர் நாரா
    யணசாமி பகர்ந்தசெய்யு ளனைத்து மொன்றுப்
போதவளம் பெறத்திரட்டித் தந்து சேடன்
    புனிதசிர மசைத்திடவெண் கமலை வாழ்த்த
மாதவனு சீர்வதிக்கப் புவியின் மேவும்
    வாணரெலாம் புகழ்ந்தேத்த மகிழ்கூர்ந் தானே.

---

அஷ்டாவதானம்,

## பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் இயற்றிய

விருத்தம்.

மெய்யுட் டிரட்டு மேலோன் பதத்து மீதூர வைத்திடுபவன்
பையுட் டிரட்டு சிறிதேனு மின்றிப் பாராரும் வேலூரினன்
றையுட் டிரட்டு பாவாணர் சிங்க நாராய ணச்சாமிசெய்
செய்யுட் டிரட்டு கல்வித்திரட்டு செழுமைத் திரட்டாமரோ.

---

சென்னைமாநகரம், முத்தியாலுப்பேட்டையிலிருக்கும்

வேதாந்தபிரசங்கி,

## அ. முனிசாமிநாயகரவர்கள் இயற்றிய

கட்டளைக் கலித்துறை.

சீர்கொண்ட நற்கவி வாணர்க்கு நண்பன் றிகழுடலாற்
பேர்கொண்ட வன்வேகி நாரா யணசாமிப் பிள்ளைநுவல்
ஏர்கொண்ட செய்யுட் டிரட்டினை யாவரு மேத்துதற்கு
நேர்கொண்ட யந்திரத் தாற்பதித் தெங்கும் நிறுவினனே.

---

"வெற்றிக்கொடியோன்" எடிற்றரும்

"சென்ற் மேரிஸ் காலேஜ்" தமிழ்ப்பண்டிதருமாகிய

## பு. த. செய்யப்பமுதலியாரவர்கள் இய்ற்றிய

விருத்தம்.

கஞ்சனின் மருக னாகிக் காலிபின் னின்ற பாதன்
பஞ்சநற் கருவி கொண்டோன் பதாம்புயம் பரவச் செய்வோன்
பஞ்சர மொன்றிற் கிள்ளை பருந்தொடு வளர்வே லூரான்
தஞ்சத்தைத் தாங்குங் கிருஷ்ண சாமிவே டந்த பாலன்.

கற்பினை யுடைய கல்வி காரிகை தன்பா லீன்ற
பொற்பமர் கவிகள் சேர்த்துப் புலவருக் கோர்கண் ணாக
அற்பருக் கசனிநாரா யணசுவா மிக்கோன் றந்தான்
சொற்பய னறிவோர் நித்தஞ் சுவைநுகர்ந் திடுவ ரன்றே.

---

"சென்ற்மேரிஸ் காலேஜ்" தமிழ்ப்பண்டிதராகிய

## சின்னப்பாவுமுதலியா ரவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மாலூர்வான் சடிலமுனி யடியுவர்கண் விழைந்தருளு மான்மியம்போன்ம், மேலூர்வா ழிமையவரும் நனிவியப்பப் பலவமயம் விள்ம்புஞ் செம்பாப், பாலூர்வா யமுதூரச் செய்யுட்டிரட்டெனுமொருநூல் பகர்ந்திந் தான்சீர், வேலூர்வாழ் கிருட்டிணமா லருள்நாரா யணசாமி மேன்மை யோனே.

இதுவுமது.

சீர்கொண்டா னறநெறியாற் றருமனைப்போற் றிறப்பொறையாற் சேட னைப்போற், பார்கொண்டான் முல்லைநிலத் தார்கொண்டான் மனுநீதி பார்த்தி பற்போல், நேர்கொண்டான் செய்யுள்திரட் டெனுநூலால் நாவலனாய் நிகழ்த்துஞ் சீர்த்தி; பேர்கொண்டான் நாரணன்போல் யார்கொண்டா ரிப்பெருமை பேசுங் காலே.

---

பலகைதொட்டி வியாபாரம்

வித்துவான்,

## குளப்பாக்கம். கதிர்வேல்நாயகரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

மஞ்சு பிறைதவழு மாமலைசூழ் வேலூர்வாழ்
விஞ்சு புகழ்கிருஷ்ண வேளளிசேய்—செஞ்சொலமை
நாரா யணசாமி நாவலன்செய் யுட்டிரட்டின்
சீராய்ந்து சொல்லுவரார்? தேர்ந்து.

---

இலக்கண உதாரணவிளக்கம், இலங்கைச்சரித்திரம்,

காளிதாசசரித்திரம்முதலிய நூல்களை இயற்றினவரும்,

தற்காலம் வெள்ளையநாடார் அச்சாபிஸ் விசாரகருமாகிய

யாழ்ப்பாணத்து மானிப்பாய்

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களியற்றிய.

நேரிசை வெண்பா.

சீரார் தொன்மரபின் தீபமே போன்றுவரு
நாரா யணசாமி நாவலன்றன்—கூராரும்
செஞ்சொற் சிறப்புறச்செய் செய்யுட் டிரட்டிக்கு
நஞ்சொல்புக ழோமனமே? நாடு.

---

இராயபுரம் உபாத்தியாயர்

## பவழை, தம்புசாமிமுதலியாரவர்களியற்றிய

இன்னிசைவெண்பா.

சீராரணிபயனூற் சிந்துண் டமிழ்விசும்பு
நாரா யணசாமி நற்கல்வி மின்மணந்து
செய்யுட் டிரட்டென்னுஞ் செல்வ னுலகழியாப்
பெய்யுற் றனனே பெரிது.

---

ஸ்ரீபாலதண்டாயுதபாணிக் கடிமைபூண்டவரும்

ஜாதக ஆரூட கணிதநூலாசிரியருமாகிய

ஜோதிஷ. இரா.

## உருத்திரகோடிப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீராரும் பொழிற்புடைசூழ் வேலூர்வா ழாயர்குலஞ் செய்த வத்தால், பேராருங் கிருஷ்ணசா மிப்பெருமா னரிதீன்ற பெருமை யோனய்ப், பாராரும் புலவனாரா யணசாமிப் பாடியசெய்யுட் டிரட்டை, யாராரும் புகழவினி தச்சியற்றித் தந்ததற்கென் கைம்மா றம்மா.

ஐயனெனும் பழனிமலை யாண்டவன்ற னம்மானென் றமரரேத்தும், வையரவப் பாயலமர் மாதவன்றன் குலத்துதித்த பண்பன் மேலாம், மைவிழியார் மயல்கொளுநா ராயணசா மிக்குரிசில் மகிழ்ந்து நாளுஞ், செய்யுள்களா மமிர்தமதைத் திரட்டியுல குக்களித்துத் திடம்பெற் றனே.

---

அதிபத்தநாயனார்கீர்த்தனம்பாடிய

## பு. கா. ஷடாட்சர ஆரியரா லியற்றிய

கட்டளைக் கலித்துறை.

சீரோங்குஞ் சென்னை யிராய புரங்கோ வைசியகுலப்
பேரோங்குங் கிஷ்ண சுவாமிப்பிள் ளைப்பெரு மான்றவச்சார்
நாரோங்கு நாரா யணசாமிப் பிள்ளைவித் வானையடுத்
தோரோங்கச் செய்யுட் டிரட்டெனு நூற்செய்தச் சிட்டனனே.

—:o:—

ஸ்ரீ கண்ணபிரான் பக்தஜன சபாப்பிரசங்கியும்
சென்னை ரெயில்வே சீப் இஞ்சினியர் ஆபீசில் லைற்றருமாகிய
## பொ. மு. கேசவசுப்பராய செட்டியாரவர்களால்
இயற்றிய
எழுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்பெறுங் கடலிற் பிறந்ததெள் ளமுதோ?
செங்கரும் போ? செழுந்தேனோ?
வேர்பெறும் பலவின் றீஞ்சுவைக் கனியோ?
விழைவுறு மினியசர்க் கரையோ?
பேர்பெறும் வேலூர் கிருஷ்ணசா மியினற்
பெருந்தவத் துதித்தநம் புலவோன்
ஏர்பெறும் புகழ்நா ராயணசாமி
யியற்றுசெந் தமிழ்ச்செய்யுட் டிரட்டே.

---

இராயபுரம் சிவக்கியானி,
## வா. சொக்கலிங்கம்பிள்ளை இயற்றிய
கட்டளைக் கலித்துறை.

கற்கண்டு சர்க்கரை முக்கனிப் பாலுங் கலந்ததைப்போற்
சொற்சுவை தோன்றிடச் சொற்றதன் பற்பலச் செய்யுள்களை
விற்பனர் நெஞ்சம் வியப்புறச் செய்யுட் டிரட்டெனவே
மற்புய நாரா யணச்சாமி யச்சிட்டான் மாநிலத்தே.

---

## தேவாதூர் - முருகேச உபாத்தியாயரால்
இயற்றிய
எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

திருமருவு மிராயர்புரி தன்னில் வாழுஞ்
செல்வயா தவகுலத்தின் றோன்றன் மிக்க
அருமறையும் பலகலையு முணர்ந்த வன்மா
லடியிணையைத் துதிபுரியு மழகு சீலன்
உரிமைநாரா யணச்சாமி செய்யுள் கேட்க
வுத்தமர்க ளெங்நாளு முவந்து வாழ்த்த
நிருபனெனச் செய்யுளொன்று திரட்டித் தேர்ந்து
நிலத்தின்மிசைச் சேடனஞ்ச நிகழ்த்தி னானே.

---

திருக்கழுக்குன்றம்

## கந்தசாமிமுதலியாரவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீருறும் படிகோ பாலனைக் காத்த செங்கண்மால் தோற்றிய குலத்தின், பேருறும் படிவே லூர்கிஷ்ண சாமி பிள்ளையின் றவத் தினி லின்பத், தாருறு முடிக ளளித்திடு நாரா யணசாமி நாவ லோன் புலவர்க், கேருறும் படிசெய் யுட்டிரட் டெனுநா லியற்றனனெழில்பெற விசைந்தே.

நேரிசை வெண்பா.

எண்டிசையும் போற்றிட வெந் நாலிடத்துந் தன்கவியைப்
பண்டிதர்க ளேற்கப் பரிந்தளித்தான்—அண்டர்களும்
நாரா யணசாமி நாவலன்செய் யுட்டிரட்டைப்
பாரா யணஞ்செய்வார் பார்த்து.

---

சென்னை - பிளாக்டவுன், விஜயநகரமகாராஜா

பெண்கள் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதராகிய

## க. திருவேங்கடநாயுடு அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

வள்ளல் கிருட்டினமால் மாதவமே யோர்வடிவங்
கொள்ளும்நா ராயணசா மிக்கோமான்—தெள்ளுதமிழ்ச்
செய்யுட் டிரட்டருத்தஞ் செப்பமுடி யாதன்றே?
பையரவந் தாழ்ந்தான் பயந்து.

---

தஞ்சை, வேங்கடாசலபண்டிதர் குமாரர்

## குமாரசாமிபிள்ளையவர்களியற்றிய

கட்டளைக் கலித்துறை.

சீர்கொண்ட கங்கைச் சடைப்பெரு மாற்கருள் செய்பெருமான்
நீர்கொண்ட கொண்ட னிறத்தன சோதா நெடுந்தவஞ்சார்
பேர்கொண்ட கண்ண பிரானைப் பணிகிஷ்ணப் பிள்ளைநலத்
தேர்கொண்ட நாரா யணசாமி செய்கவி சீர்த்திபெதே.

சாத்துகவிகள் முற்றிற்று.

---

உ

இராயபுரம், சிவக்கியானி

## வ்ர். சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றிய

# புகழ்ப்பாமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

பொன்மருவு நாரா யணச்சாமி நற்புலவ
னின்மருவுங் கீர்த்தியெங்கும் நீடிடவே—சொன்மருவு
மாப்புகழ்ச்சிச் செய்யுள் வழுத்துதற்கு எம்மருங்குங்
காப்புதிக் கையான் கழல்.

நேரிசை வெண்பா.

ஏர்பொருந்து நன்னூ லியற்காரிகை தொன்னூல்
பேர்பொருந்த வேபடித்த பேருடையான்—வார்பொருந்து
மின்னே! நாராயணசா மிப்புலவன் போல்வலவர்
இந்நானிலத்தி லெவர். (க)

சீராருஞ் செந்தமிழின் செய்யுட் டுறையனைத்தும்
ஏராரு மால்கிருஷ்ண னீன்றமகப்—பேராரும்
நாராயணசாமி நாவலனைப் போலெவர்கள்
பாரா யணஞ்செய் பவர். (உ)

மாவீர சோழியமும் வண்மைதரு நற்குறளும்
மாவீர மாயுணர்ந்து மற்றோர்க்கும்—நேரீந்து
நாற்றிசையுங் கீர்த்திகொளும் நாரா யணசாமிப்
பார்த்திபற்கு நேரார்? பகர். (ங)

கல்விக் களஞ்சியசீர்க் கல்லாடம் நாலடியார்
சொல்விற் களஞ்சியசிந் தாமணியோ—டெல்லாமுங்
கற்றறிந்த நாரா யணசாமிக் காவலர்போல்
நற்றமிழ்தேர் வாரை நவில். (ச)

கவிக்கா வலர்புகழ்தொல் காப்பியத்தைப் பாடுங்
கவிக்காகக் கற்ற கவிஞன்—புவிக்கா
வலரேத்து நாரா யணசாமி போல்வார்
உலகிலுள்ளார் யாவர்? உரை. (௫)

க[illegible]ந்த [illegible]ாரக் கடற்படிந்து பொன்னளிக்குஞ்
சீமான்க ளைத்திருத்துஞ் சீமானே—ராமா
யணக்கவியும் பாரதமும் ஆய்ந்தறிந்த நாரா
யணக்கவிஞன் போலார் அறை. (௬)

சீர்விளங்கும் பாகவதஞ் செப்புந் திருவிசைப்பா
ஏர்விளங்கும் பல்லாண் டியாவற்றும்—பேர்விளங்கும்
மிக்கபுக ழேபடைத்த வேலூர்நா ராயணசா
மிக்கவிஞ னென்றேநீ விள். (௭)

சீராய சொல்லெழுத்துஞ் செப்புபொரு ளும்யாப்பும்
நேராய நல்லணியும் நேர்மையுடன்—நாராய
ணச்சாமி கற்றுணர்த்த நன்மைதிகழ் செந்தமிழை
மெச்சார்யார்? யாரிவற்கு மேல். (௮)

கட்டளைக் கலித்துறை.

கவிசொல்லும் பாவலர் தங்களைக் கண்டு கடுகடுத்துச்
சிவிகையி லேறித் திரியுநிர் மூடரித் தேசத்திலே
பவிசுகள் கெட்டுப் பணந்தன்னை வீணிற் பாழுசெய்வார்
நவிலுநா ராயணன் போற்றரு வாரெவர் ஞாலத்திலே. (௯)

## பம்பரத்தைப்பழித்தல்.

சான்றோர்கள் மெச்சிய நாரண சாமியின் றண்வரையில்; மான்றேன்கண் சொற்பெண்கள் கொங்கைக்குத் தோற்றிந்த வன்பம்பரந், தான்சிறு பிள்ளைக ளாற்றொண்டி யாயொடிந் தேசக்கையாய், வான்வரை யுஞ்சித றிச்சென்ற தென்று வழுத்தணங்கே. (௰)

## கும்பத்தைப்பழித்தல்.

மங்களஞ் சேர்கவிச் சிங்கநா ராயணன் மால்வரையில்
நங்கையர் தங்கநற் கொங்கைக்குத் தோற்றிந்த நானிலத்தில்
கங்கை முகக்கக் குடங்களெல் லாங்கயிற் றிற்குட்பட்டு
எங்கெங்குஞ் சில்லிக ளாயொடிந் தோடென வேய்ந்தனவே. ()

## கமலத்தைப்பழித்தல்.

எங்கும் புகழ்பெறு நாரண சாமியி னோர்வரையில்
தங்கிய மங்கையர் கொங்கைக்குத் தோற்றுத்தண் டாமரைகள்
தொங்கல்க ளாயதன் சுந்தர மற்றுத் துவண்டுநிற
மங்கி வதங்கியுங் காய்ந்துந் தொலைந்தன மாநிலத்தே. (மு௨)

## கிரீடத்தைப்பழித்தல்.

நன்னகர் மன்னிய மன்னவர் சென்னியி னன்குமின்னும் [ங்கிப்
பொன்முடி மங்கையர் கொங்கைக்குத் தோற்றுப் பொலன்மழு
பொன்னும் மணிகளும் முத்தும்வை டூர்யமும் போயொடிந்து
சின்னமும் பட்டது நாரண சாமிச் சிகாமணியே. (மு௩)

## வெறிவிலக்கல்.

சென்னை யிராயர் புரிவாழு நாரணச் செம்மல்சென்று
இன்னம் வராம லிருப்பதி ஞானினைந் தேங்குகின்றாள்
கன்னலும் பாலு நறவுங் கலந்தசொற் காரிகையாள்
அன்னற் குழலணங் கேமையென் செய்த தறுப்பதென்னே. ()

## வெறிவிலக்கல்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஓதிமஞ்சேர் தடம்பொழில்சூ ழிராயபுரி வரையிலுறை யுசி தமங்கை, பாதிமதி நுதல்வண்டு விழிபுருவம் வில்லசலப் பயோ தரத்தாள், ஓதியநா ரணன்மயலால் கலங்கிக்கண் ணீர்சொரிந் து தெளிவற் றுளோர், தீதுமிலா மை*மாரிக் கண்ணிலிட்டால் தெளிவாமோ? சீர்மின் னாரே. (மரு)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

தேன்மலர்ச் சோலை சூழுஞ் சென்னைநா ரணவிற் பன்னு!
மான்விழி வதனஞ் சந்த்ரன் முருங்குறந் ததரங் கொவ்வைக்
கான்புழு கணிந்த கொங்கை கந்தரம் நிதம்பம் பொற்றோர்
ஆன்மனு மகடாண் மைய லகன்றிட வணிந்தி டாயே. (மசு)

---

* மாரிக்கண்ணிலிட்டால் - மாரியம்மனிடமாகிய கோயிலில்வெட்டினல்.

## நடுவெழுத்தலங்காரம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மலை வேதந் திலதங் கூட்டம் மசகம் வாசனைச்சிள் வண்டிச்
சொற்கள், நீ நடுவி லிருக்கு மெழுத்துகள் பெயரான் தந்த
சுதா! நெடுமால்பாதம், பலபொழுதுந் துதிபுரி நாராயணசாமிப்பு
லவா! படிப்பதற்கு, இலையெனவே மொழியாமற் கேட்கும் புத்தக
ந்தரநீ யிசைத னன்றே. (௰எ)

உகிர், சுருதி, பொட்டு, கணம்
கொசுகு, சாவாது, சியிலி } கிருட்ணசுவாமி

## நடுவெழுத்தலங்காரம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பாசுரஞ் சதுரதத்தார் கழனிவாரி பட்சமுதல் பரணையெ
னும் பதமாறுக்குள், ஏசலிலா நடுவெழுத்தின் பெயரோய் மற்ற
வேழுமைந்துந் தன்வசமாயுற்றமாது, பேசுமொழி யல்குன்முலை
கூந்தற்றேகம் பிரியத்தால் மெலிந்தா ளவ்விழியணங்கு, நேசமு
டன் வரவழைத்தே யவளையிந்த நேரத்தி லணைந்திடுத னீத
மாமே. (௰அ)

பாநால், தேரார், வயல், புணரி
பாசாதி, சிமிள் } நாராயணசாமி

## நடுவெழுத்தலங்காரம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அம்மான்பெண் சிவன்சுபுத்திர னன்புவேத நடுவாழை யு
மைசேனை வித்தையாகும், இம்மொழிக ணடுவிலுற்றவெழுத்தான்
மான்க ணிதழ்கனிநல் வான்மருங்கு லிரண்டு கொங்கைச் செ
ம்மலையா லகடுசுதி மதிமறந்து தியங்குகின்றுள் கலிசதங்கைச்
செறிந்ததாளாள், நம்மாதுசதிபுரியாள் பெண்கடங்கள் பதிநாரா
யணசாமி நயந்திடாயே. (௰கூ)

மாமன், கன்னி, வாமன், மதலை, ஆவல், சுருதி,
மத்தி, கதலி, சத்தி, பதாதி, கல்வி. } மன்மதவரு
த்தத்தால்.

## கமலபந்தம்.

### நேரிசைவெண்பா.

வான்யன மானகன மானதன வானவன
வானவர் வணங்கு திருமாருளைத்—தாளை
தாகங்கொண்டே நரணச்சாமி துதிப்பாயவட்குத்
தாகமது கொண்டு முத்தந்தா. (உ௰)

வாநயனம் ஆன—கண்போன்றவனேவா, கனமான கனம் பொருந்திய, தனவானம்—பொன்னுலகம், வனவானவர்—அழகியதேவர் திருமாருளைத்தான்—திருமால்தாளைத்தான், அதன தாகம்—அதிகப்பிரியம்.

## இரதபந்தம்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பெ | | | | | | |
| | | | | | உ | ற | வு | | | | | |
| | | | | ள | யா | தா | நீ | ரா | | | | |
| | | | ய | ற | வே | வை | தா | ளே | யா | | | |
| | | லை | ல் | எ | ல் | ய | ம | கை | தோ | மே | | |
| | வ | ல | ரோ | சொ | ல் | வீ | ரோ | ரு | த் | த | ர | |
| நா | மி | சா | ச் | ண | ய | ரா | நா | ரோ | வ | ல | ல் | ந |

### நேரிசைவெண்பா.

நல்லவரோ! நாரா யணச்சாமி நாவலரோ!
சொல்வீரோ ருத்தரமே தோகைமயல்—எல்லை
யறவேவைதாளேயா ராநீதா யாள
உறவுபெற தாவையவீ ரா! (உக)

## சதுரங்கபந்தம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செ | வ் | வா | யி | த | ழா | ளோ | த |
| ன | ன் | *அ | ம் | கு | க் | ரை | யு |
| மா | த | னை | தா | ளை | யி | ன் | பா |
| றை | ம | லா | யி | ன | ன் | *வ | மை |
| ல | ணை | த | ரி | ல | ந் | த | மு |
| று | ன் | த | ந் | க | ங் | ள | தோ |
| ன | ரி | க | *னு | ன் | னு | கி | ர் |
| தே | ழி | மொ | னே | ண | ர | நா | ய |

கட்டளைக் கலித்துறை.

சென்னை யிலங்கிய நாரணனே? மொழி தேனரிக
னுன்னுகிர் தோளங்கந் தன்று லணைதரி லந்தமுமை
வன்னயி லாமறை மாதனை தாளையின் பாயுறைக்கும்
அன்ன செவ்வாயித ழாளோ தறையி னரிதரிதே. (உஉ)

இருபத்திரண்டு மங்கலச்சொல்லுக்கும்
நேரிசைவெண்பா.

திருமணிதேர் பொன்மதிநீர் சீர்கடல்மா தங்கம்
பரியுலகங் கங்கைப் பரிதி—பெருசொலெழுத்
தாரணம்பூ மங்குலமிழ் தாநிலமுங் கீர்த்திமலை
நாரணனே? மங்கலச்சொ றுடு. (உ௩.)

பூவை, அஷ்டாவதானம்
**கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றிய**
**கமல பந்தம்**
நேரிசைவெண்பா.

நாகரிக மாகசுக போகமிக சோகமக
ராகமுக மேவிவரு பாவலனு—மோகையொடு
பாரா யணமுழுதும் பார்த்துணர்ந்தான் வேலூர்வாழ்
நாரா யணச்சாமி நன்கு.

# சிறப்புப் பாயிரம்.

சென்னை பிளாக்டவுண் ஐஸ்கூல் தமிழ்ப்புலவராகிய

இராயபுரம்,

அஷ்டாவதான ஜெகராவுமுதலியாரவர்களியற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

சந்தனப் பொதியச் செந்தமிழ்க் குரவன்
றருமா ணக்கர்பன் னிருமா ணக்கரில்
ஒல்காப் புலமைசால் தொல்காப் பியமுனி
தன்னியற் பெயர்நூன் மன்னியற் றிறம்பா
வாதிநூன் முதற்பன் னீதிநூற் பொருள்தழீஇச்
சொன்னயம் பொருணயந் தொடைநய மேய
பன்னயம் பயக்கும் பான்மைய வாகிப்
பாற்கடல் கடுக்கு நாற்கடற் றுறைதமிழ்
நூற்கட லிலக்கா மேற்கட லோர்கொளத்
தேமலர் புனைஇய பூமலர்ச் சரமெனஅச்
சிந்தா மணியவிர் நந்தா வணியெனஅ
உடலுக் குயிரெனஅ வுயிருக் குணர்வெனஅ
பற்பல வம்யம் பற்பல விதிபெயாச்
சொற்பல தொடுத்த சொற்பல செய்யுட்
டம்மைத் திரட்டி வெம்மைக் கலியிறத்
தருகெனத் தன்பெயர் பெருகத் தந்தனன்
அறுகாற் பறவை சிறுகா லொசிக்கும்
பூங்கொடி மருங்குல் போர்மதன் வேட்டுத்
தேங்கொடிப் பணைக்கள மாங்குயிற் கூவக்
கணையென வூன்றிய கனைதம தங்கத்
திணையெனக் கட்டிள விருங்கூழ் வளர்க்கும்

வளங்கெழு வேலூர் தலங்கெழு வள்ளல்
உணர்வு நிறையோ டோர்ப்புக் கடைப்பிடி
குணஞ்சிறி தஃகாக் குலவிய மேரு
தளவ நிலத்தூர்த் துளவப் பைந்தார்
தயங்கிய பொன்வரை முயங்கிய செந்தோண்
மாலிரு வரத்தில் வளர்ணி பொய்யெனு
நாலிரு மகளிரும் நயத்தகு வாழ்வினன்
இருடபு மெய்ம்மறைக் கருடத் துவசன்
மூலமே யெனக்கரி யோலமிட் டோயுமுன்
வந்தணைந் திரங்கிய செந்தா மரையான்
வரகலா தனவெழிற் பிரகலா தனனெனும்
ஆழ்வா னுயிர்த்து வாழ்வான் புரந்த
மாதவ னுதித்தருள் யாதவ மரபினன்
நல்கூர்ந் தவர்க்கும் நல்கூர்ந் தெனினும்
இல்லையெ னமங்கலச் சொல்லையென் றறியா
தயலினுங் கிளையினும் புயலினே ழளவரு
ணேமிநேர் கிருட்டின சாமிமால் தவத்தில்
சான்றோ றொன்கை யீன்றோர்க் கழகெனும்
பண்டை மொழிப்பயன் கொண்டினி துதித்தோன்
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
யுலகிய லறிவோ டுயர்குண மேன்மை
கற்றுணர்ந் தடங்கன் முற்றும் பயனுக்
கண்டவன் கண்டது கற்போர் பலனு
விண்டவ னுலகுயிர் வெண்ணெயோ டொருங்கு
உண்டவன் கழலிணை பேரம்புவா ரடித்துகள்
கொண்டவ னந்தணர் கொற்றவ ராரியர்
எப்பெரி யோர்க்கும் எப்புல வோர்க்கும்
ஒப்பிலாத் துணையி லோங்குமெங் கோமான்
நாமிசை யேத்தும் நாராயண
சாமி யெனப்பெயர் தகுநா வலனே.

கடவுள்துணை.

யாதவகுலதிலகர்,

வேலூர் கிருஷ்ணசாமிபிள்ளை யவர்கள்

குமாரராகிய

இராயபுரம், வித்துவான்

# நாராயணசாமிபிள்ளை யவர்கள்

அவ்வவ் அமயங்களில் இயற்றிய

# செய்யுட்டிரட்டு.

---

திருக்கணம், அருணாசலபிள்ளையவர்கள்

குமாரராகிய,

## சீயாலபிள்ளை யவர்கள்மீது

---

இருபத்தெண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீரோங்கு நான்மறை துணிந்தபொரு ளீதெனச் செகதல
த்துறுமன் னுயிர், தெரிந்துசெந் நெறியதனி லொழுகியொரு
தனிமுத்தி திரமுறச் சேரு மாறு, செழுமலர்ப் பொழில்கொள்
பூ தூரின்வரு மெதிகுல சிகாமணிப் பதாம்புயத்தைத், திகழுற
வுளத்தின்மிசை வைத்தமெய்த் தொண்டனற் செந்தமி ழொரு
ங்குணர்ந்தோன்,

பாரோங்கு கோமள புரத்துவரு ராசகோ பாலப் பெருந்த
கைக்குப், பகர்சீட னரா யணச்சாமி விநயமொடு பாரித் துரை
ப்ப தொன்று, பல்குபெரு வானெலா நிறைமதில் திருக்கணம்
பதியில்வாழ் சுகுண மேரு, பலகலைகள் முற்றுமுணர் மேதாவி
நன்னடை பயின்றவான் சீல தீபம்,

காரோங்கு மீகையிற் கற்பகம் பொறுமையிற் கடலவனி
யென்றுநவிலக், கருணீக குலவலம் புரியின்முத் தெனவந்த

கண்ணியசியாலமகிபா! கைப்பொருளி லாதவர்க் கிவ்வுலக மில் லெனக் கழறுமொழி நீயறிதியால், கயவர்சிலர் செய்தவஞ் சனை யினு லுத்தியோ கந்தனை யிழந்து துயரப்,

பேரோங்கு மிடியினுல் யான்படு மிடுக்கணது பேச்சுக் கடங்காது காண், பெருமிதம் பெறுநினது சமுகமதை யண்டியது பேர்த்திடற் கெண்ணிவந்தேன், பெரியோ யெனைக்கைவி டாமலே கருணையாற் பேணியே யுட்களிக்கப், பெறலரும் பரிசொன் றளித்துன்சீ ரொருவாது பெருகியே வாழியவரோ.

சந்தவிருத்தம்.

இந்தணிமாடக் கண்ணீநகர்க்கோ ரொழிலிப்போற்
சந்ததமும் நிலவுஞ் சீயாலத் தகையா! வென்
புந்திதளர்ந்து வருந்தியதன்பு பொருந்தியெனக்
கந்தமிலின்பூ பெறுந்திற னன்கருள் செய்வாயே.

நேரிசை வெண்பா.

முப்பொருளின் றன்மை மொழி சைவசித்தாந்த
திப்பியமா நன்னெறியைச் சேர்கருணை - வைப்பாகுஞ்
சைவ சிகாமணி சீயால தயாளுவலா
லுய்வதரி தெம்போல்வா ருற்று.

அக்கிரனைநே ரருணசல மகிபன்
நற்கீர்த்தி யோர்மகவி னல்லுருக்கொண் - டிக்கா
சினிப்புக்கா லன்னதுணை சீயால மானின்
றனைப்புக்கேன் சாய்ந்த திடர்.

---

சென்னைமாநகரம் இராயபுரத்திலிருக்கும்,

## உ. சி. முனிசாமிபிள்ளையவர்கள்மீது

இருபத்தெண்சீரான் மிகுத்துவந்த கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

பொன்னாட்டு முப்பத்து முக்கோடி யமரரும் புகலிருடி யருமுரகரும், புனிதமுறு நித்யவை சூரிகளு மயன்முப்பு; ராரிகுலிசாயுதனெனும், புத்தேளு மத்யலோ கருமநு தினந்துதிசெய் பொற்பதாம் புயகேசனைப், பூமகண் மணுளனைக் கவுத்துவா பரணனைப் புண்யனைத் துழாய்க்கண்ணனைப்,

பன்னுளு மிர்தயா சனத்தினி லிருத்திப் பராவு யாதவகுல த்தோன், பணைகள்செறி வேலூர் கிருஷ்ணசாமிப்பிள்ளை படர்த வத்துறுநலத்தோன், பாவலவன் நாராயணச்சாமி பிள்ளைநனி ப ட்சம்வைத்தெழுதுநிருபம், பகரும் உறக்காடு பேட்டையூரன் பரஸ் பரமவுபகார விதுரன்.

கன்னுவதாரமால்சிங்கபெருமாள்பிள்ளை காட்சிமிகு தவகு மாரன், காஞ்சிபுரி யிற்சத் திரங்கட்டி தருமஞ்செய் கர்த்தன்மதி ராசு ரெயில்வே, கண்ணிஞ்சி னீரிங்காப் பீசில் க்ளொர்க்குத்தி யோ கப்பிரபுவாய் விளங்கும், கனகீதமிகு என்னம்மான் முனி சாமிபிள்ளைகுண காத்திர னெதிர்ந்துகாண்க,

உன்னையல் லாலெனக் குறவின்று ளத்தியந்த உத்தமர்க ளி லையாதலால், உத்தியோக மின்றியான் கெடுநாள்படுந்துயர மொழியும் படிச்செய்யவே, உன்றனுலாகுமென் றண்டினே னெ ன்றன்மீ துள்ளன்பு வைத்தியாதாம், ஓரிடங் காட்டியெனை யாளா க்கி வைப்பதூஉ உன்மேல்விழுந்தகடனே.

கட்டளைக்கலித்துறை.

யாருமே லோரை யடுத்திடின்மேன்மை யடைவரென ச்
சீரியர் சொன்னதற் குச்சான்று கண்டனன் திங்களொளி ந்
நார மதிற்புக் குபுகுடந்தோறு நயந்தனவ ந்
நீரம தாலடுத் தேனென்னு னின்றயை நீட்டுக வே.

---

கவர்ண்மென்ட் கெஜட்பிரஸ் கவுண்டாண்ட்

## முருகேசமுதலியா ரவர்கள்மீது.

இருபத்தெண்சீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மணிகொண்ட மாடமா ளிகைகெழுமு வேலூரில் வந்தயா தவகுலத்தன், மாதவன லாதறிய கில்லாமனத்தன்மெய் வை ணவ வொழுக்கம் வாய்ந்தோன், மதிதவ ழெழிற்புரிசைமலிகோ மளப்பதி வயங்கியற் றமிழாரிய, மாமணிநலங்கொள்சென் னைத் துரைத் தனவித்தி யாசாலை மன்னுபுலவர்,

கணிகொண்ட சீர்த்திநம் ராசகோபாலனிரு கழலை மறவாத வன்பன், கவிநான்கும் வல்ல நாராயணச்சாமியாங் கவிராசன் விட்டகடிதம், கங்கைகுல மணிதிவ்ய சிந்தாமணியரும் கல்ம

ணி யெனத்திகழ்ந்து,கவர்ண்மெண்டு பிரசினிற் கவுண்டாண்டெ னப்புகழ் கதிக்கவரு ஞானமணியப்,

பணிகொண்ட பாயலான் சித்தாந்த மேபெரும்பயனெனுங் கவுத்துவமணி,பரிதிநிகர் மணிமாட மோங்குவேட் டைச்சுரப்பதி வரும் பாக்கியமணி,பகருமுருகேசவள் ளற்பெயர்கொள் மணி யிதைப்பரிவாய்மகிழ்ந்துகேண்மோ,பரதகண் டத்திலுன் புகழ் சென்றிடாவிடம் யார்க்கிலை யாகையாலே,

அணிகொண்ட விப்பிரசி னிற்பன்னோ ராண்டுவரை யமிர்த சாமிப் பெயரினேன், அதிகமு முழைத்துமீக் கயநோயடைந்தாக மிகவாடி யசைவுமற்றே,அதனல் வரப்படுந் தன்மை யின்மை யினீயு மன்பினுற் கிசுதுணையின், அருஞ்சபையினிற்பேசி யுப கார சும்பள மடைந்திடும் படிசெய்வையே.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

புனிற்றுங்கின் றிளம்பசும்புல் லெனக்கறிக்கு மரகதத்தூண் பொலியுமாடந், தனித்திலங்கும் வேட்டைசு ரத்துமை கரத்து நதிதன்குலத்து, மனித்தர்செய றங்கெழுமிக் கான்முளையா வருமுருகே சப்பேர்வள்ளால், இனித்தமியே னின்சமுக மடைந்து கேட்பது மொன்றஃ தியம்புகேனல்.

நேரிசைவெண்பா.

உலகோங்குங் கீர்த்தி யுயர்முருகேச<br>நிலவுதருவனையாய் நின்ற—சலவன்<br>படுந்துயரந் தீர்க்கப் படாதோ? வெஞ்ஞான்று<br>மிடம்படுமெய்ஞ்ஞானத்தோ யிங்கு.

கட்டளைக்கலித்துறை.

நாத னரங்க னெனநான் மறையு நவிற்றுவதோர்ந்<br>தாதி யவனென் றடைமுருகேச வருட்பெருக்கே<br>நீதியி னேழை வருத்த மறிந்துநன் னேயது  ளை<br>நீதில் சமுக மறிவித்தென் றன்குறை தீர்ப்பதுவே.

---

## செஞ்சி - ஆறுமுகசெட்டியார் அவர்கள்மீது

நேரிசைவெண்பா.

மதியந்தோ யும்மதிள்சூழ் மாண்பாருஞ் செஞ்சிக்<br>கதிப னருணு சலவேள் - சுதனறு<br>மாமுக! நின் றென்னை வரவழைத்து நல்குமன்புக்<br>காமொர்பரி சுண்டோ? வறி.

விருத்தக் கலித்துறை.

மதிமிலேச்சிய சடிலனூர் வாழ்வினை விழையும்
அதிபர் மூவரி லிருவரும் பிறந்ததும் அரியே
பதியெ னூநவிற் றிடுமொரு பளகிலாமுதலாக்
கதுவு நங்களாழ் வார்களே கலக்குறும் பதியும்.

நிலவு சீர்த்தது புனிதரி னெடியசீர் நடுநா
டிலக வந்தவன் வணிகர்தங் குலத்திடை வந்தோன்
நலமுறுமரு ணாசல வேள்சுத னங்கள்
புலமை சான்றகண் ணந்தமா ரிஷிபொலங் கோத்ரன்.

சித்தி ரத்தடந் தேரினென் றூழ்ச்செழுங் கதிர்செம்
பொத்த மாடங்களண் மற்ற தலைதுரு குதல்போன்ம்
வித்தகத்தொரு வேழநின் றிறையென விழையும்
அத்த னூர்நில வியசெஞ்சி யம்பதியமர்வோன்.

சந்தவிருத்தம்.

ஐந்தின்பினென்றுநெஞ்சிற்பொருந்து மதுகாட்டலவனுமொரு
வந்திங்கடைந்து புலவோர்கலக்க மாறும்படிக்குதிக்குஞ் [கால
சந்தஞ்செறிந்த குலநாமவாறு முகனுஞ் சலாபனுளமும்
வந்தென்றுமன்பு கூரும்படிக்கு வலயத்தில்யான்விழைவதே.

கட்டளைக்கலித்துறை.

கருணா கரன்பத மேதஞ்ச மென்னக் கருதியநம்
பிரதாபன் றேன்றி புனையரு ணாசலன் பெற்றநங்கள்
குருமா மணிப்பூ னுரத்தாறு மாமுகக் கொற்றவன்மெய்
யொருநா முறைக்கு மரிச்சந்திரனென் றுரைப்பதுவே.

கொடையினிற் கன்னன் றருமத் தவன்பின் குவலயத்தே
நடையினி லன்னவ னூலடை யும்பரிசென்ன நவிற்
றடையலர்க் கிங்ங னசனியென் றேதுபவனிவணன்
படனனி நல்கினென் போற்செல்வ மிங்ங னுடையரன்றே.

---

சென்னைமா நகரத்திலிருக்கும்

## செ. வ. சகநாதம்பிள்ளை யவர்கள்மீது

நேரிசைவெண்பா.

காமேவுஞ் சென்யம்பாக் கத்து வரதப்பேர்
தேமேவு வள்ளல் செழுந்தவத்தின்—மாமேவு
நங்கள் சகநாத! ஞாலத் துனதன்பு
தங்கும் படியெனக்குத் தா.

ஸ்ரீ வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

கட்டளைக்கலித்துறை.

நூல்கொண்ட சிந்தையன் பூங்கணைமார னுதியிலைச்செ வ்
வேல்கொண்ட வித்துவ மால்சக நாதனின் வீரவெற்பி ன்
மால்கொண்டவென்மொழியைக்கிளிச்சொல்லெனமன்னியின்பு
மேல்கொண்ட நாயக னுக்கென தாவல் விதஞ்சொன்மி னே.

சோலைக் கருங்குயிற் காளங்கொண் மாரனற் றேற்றங்கண்டான்
ஆலைக் கரும்பின் சிலையுழிடை யேமல ரம்புகொண்டா ன்
சாலக் கருங்குழ லென்செய்கு வாள்சக நாதனை னு
மாலைப் பருந்தன மாதீர் விரைவில் வரச்செய்ம்மி னே.

பாட்டுப் படித்து வரும்புல வோரைப் பழித்துத்தங்க ள்
வீட்டுக் கடிக்கடி வாரா திருமென விள்மடைய ர்
கோட்டுக்கும் வேசைக்கு மல்லாது வேறுகொடுப்பதுண்டோ?
தேட்டுக் குடையண்டர் மால்சக நாதற்குச் செப்புமி னே.

பந்தான மேவுநின் மேற்புல வோர்பிர பந்தஞ் சொல்லி
வந்தா லவர்க்குக் குபேரனு மஞ்சுவன் வானவர்சூழ்
சந்தானங் கற்பகங் கொண்டல் சுரபி சலசநிதி
சிந்தா மணிக்குஞ் சகநாத நீயெனச் செப்புவரோ.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வண்டுசென்றால் செழுமலர்த்தார் மதுவருந்தி மயக்குறும் பைம் மயிலோவென்றால், கண்டுகொண்ட வவன்விழியினுக்க ஞ்சுஞ் சிலைமதனைக் காளமொன்றிங், குண்டுசென்றால் வளர்த் தெடுத்ததாய்க்குதவாப் பிள்ளையைப்போ லெனைத்துறக்கும், ப ண்டுசென்ற முகில்பொதுவர் குலசகநா தற்கெனது பசைசொ ல்வாயே.

## நடுவெழுத் தலங்காரம்.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பத்துகிளி பெரியசபை நூறுவாளி
 பசுதவளம் வயலெனவெண் பதமெட்டுள்ளே
மத்திமத்தி னடுவெழுத்தாற் பெயர்படைத்தம்
 மாண்பினுக்கே வமைந்தபுகழ் மலிவாய்ச்செய்ய
எத்திசையுந் துதிசென்னியம் பாக்கத்து
 விணையினக ரவதரித்த வினியசீரார்
உத்தமனே! யிதுகவிதை யுளத்தராய்ந்துன்
 னரியதிருக்கருணை வெள்ளம் பெருகமாதோ.

| | | | | |
|---|---|---|---|---|
| தசம் | சுகம் | மாநாடு | சதம் | அம்பு |
| | கபிலை | வெள்ளை | விளைவு | |

திருவெவ்வுளூரைச்சார்ந்த நெல்வேலி கிராமமுன்சீபும் மணியமும் ஆகிய

## நல்லதம்பிமுதலியா ரவர்கள்மீது

நேரிசைவெண்பா.

சீராரும்நெல்வேலிச் சீமான்று மோதரப்பேர்
காராளன் புத்திரசி காமணியே-ஏராருந்
நல்லதம்பி மாலே! நீ நான்றவா யற்கிளைய
வல்லதம்பி மாலாய் வதி.

வேதன்று தைப்பாத மேபணியு நெல்வேலி
நாதனல்ல தம்பிக்கு நாணியே-மாதிரதி
காந்த னருவுருவங் காட்டிப்போர் செய்கின்றான்
மாந்தர்மே லங்கணையை வைத்து.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

துதிமேவு நெல்வேலியூரா! காராளகுல சோமா! நல்ல [ன்
மதிமேவுதாமோ தரக்குமுணன்றவத்தில்வருமைந்தா! செம்பொ
நிதிமேவு நல்லதம்பி மாலே! கேள்ராயபுரி நிலம்வாழ்வித்வான்
ததிமேவு நாராயணச்சாமி யானென்பால் தயைவைப்பாயே.

---

## இரத்தினப்பிள்ளை யவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

மாவேந்து மைங்கர னுக்கிளை யோன்பத வாரிசத்தை
நாவேந்து கின்ற திருக்கண வூருறை நற்றருமன்
பூவேந்து சோலை யபிதானனீன்ற புதல்வ! தமிழ்ப்
பாவேந் திரத்தின மாலே! யென் மேல்வைநின் பட்சத்தையே.

---

திருவெவ்வுளூரைச் சார்ந்த நெல்வேலி

## வாசலிங்கப்பிள்ளை யவர்கள்மீது

நேரிசைவெண்பா.

சீரார் கருணிகச் செம்மல்சுப்ப ராயனருள்
காராரும் வாசலிங்கக் கன்னு! நின் – ஊராகும்
நெல்வேலியிலுன்ற னேயம்பிடித்தவெனை
வல்வாயனென்றே மதி.

அ வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

காசிற் பணத்திற் கவிவாணர்க் காசையெனக்
காசினியிற் சொல்லுங் கருத்தறிந்த - வாசலிங்க
சோமா! நெல்வேலி துரையே! நிலத்திடுங்காண்
பூமீதிலுன்றன் புகழ்.

---

## ஸ்ரீனிவாசநாயக ரவர்கள்மீது

பதினான்குசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மணிகொண்ட பஃறலைச் சேடன் சுமந்திட வயங்குறும் புவி மாதுமா, மதிமுகக் கொருதிலக மென்றிலங் கிடுதொண்டை மண்டலத்திற் கரும்பின்;

கணிகொண்ட சாறடும் புகைமுகி லெனத்தோகைகண்டு நடனங்குயிற்றுங்,கலாமதிச்சேகரனை நிகர் வெண்மாடம்பொலி கவின்செய்திருமங்கலத்தில்,

அணிகொண்ட வேங்கடத் தப்பனருளெய்திநின்னகன்சிலம்பினிலிங்ஙனே, தானுமா வேன்கொலென் றருந்தமி ழலங்கல் சொல் லவிர்தருங் குலசேகரத்,

திணிகொண்ட வடிகள்மர போங்கவரு சீனிவாசச் செம்மல் தேரினீயச், செங்கண்மாலடியனு கலினென்று மென்பால் சிறந்ததயை புரிதியின்றே.

---

சென்னைமாநகரத்திலிருக்கும்
இராயபுரம், மெடிக்கல் மிஷியன் வைத்தியசாலையின்
அப்பாத்தகிரியாகிய

## றெவரெண்ட். டி.கே. இட்டி அவர்கள்மீது

இருபத்தெண்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலகெலாமுன்னம் படைத்தளித்துண்டுமிழு மொப்பிலான் சமஸ்தவேதம்,உபநிடத மூவறுபுராணமிதி காசங்களோதருங்கமலநயனன்,உலப்பிலன்புறுமன்பர் மனமலரி லெந்நாளுமுறைந்திடும் முத்திமுதல்வன், உவட்டாத வின்பவடிவாம் பரம னடியிணையை யொருபோது மறவாதவன்,

அலகறு தமிழ்ப்பிர பந்தகடல் செழும்புய லணையுமெயில் செறி சென்னையின், அணிபெறு நுாைத்தனக் கல்விநற்சங்கத்

தருந்தமிழ் முதற்புலமையை, அழகுற நடாத்திடு மிராசகோபாலனெம் மையனடி மைக்குமடிமை, அன்பன் வேலூர்நாரணச்சாமி கவிஞனிங் ககமகிழ்ந்தெழுதுநிருபம்,

விலகிவில்லுமிழ்பொலன் மணிமாட நிரையோங்கு மேன்மைசெறி ராயபுரிவாழ்,விற்பனன் றமிழருமையறிவிரகனற்சத்யவேதநெறி யொழுகுசீலன், மெடிகல் மிஸ்யோன் சங்கமுயப்பாத்தகிரியாய் விளங்கிடு குணாளனங்கள, வியன்மணியெனத்தகும் இட்டிமகிபாலனணி விழைவினொடெதிர்ந்துகாண்க,

பலகலைவிநோதனீ யறியாத தொன்றில்லைபாரின்க ணுத்தியோகம், பண்ணுதவன்புருட னன்றெனப் பழமொழி பகர்ந்திடுந் திறமோர்ந்தியான், பலதரமு, முனதுசமுகந்தனைத் தேடியென் பருவரலுரைத்திருப்பேன், பரிவினிற்செய்விப்பையே லூழிவரையுமே பரவுமுன் கீர்த்திவளமே.

நேரிசைவெண்பா.

மட்டில் புகழ்வளத்த மாராய நன்னகரின்
இட்டிமகி பாலனைச்சென் றெய்தாத—தொட்ட
கவிவாண ரிங்கென்? கவிவாண ரெய்தப்
புவிவா ணருமாவார் போந்து.

உம்பர்க்குத் தன்வந் தரியென்று முன்னருஞ்சீர்க்
கும்ப முனியிக் குவலயக்கு—நன்பெரிய
வாகடத்த ஞனர் வயங்கெங்கள் இட்டியைப்போல்
வாகடத்தரோ? வவர்தாம் மற்று.

---

சென்னைமாநகரத்திலிருக்கும்,

## த. அ. தம்புசாமிபிள்ளை யவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

கங்கை குலத்து வருந்தம்பு சாமியாங் கன்னனை நீ
மங்கலமாக வழுத்துகண்டாய் நெஞ்சமே! வழுத் தி
லெங்கும் புகழவெஞ் ஞான்றுஞ் சுகமுற் றிருப்பையென்றே
யிங்குனக் கோதின னுலவன் பாற்சென் றினியடை யே..

நிதிசெய் குபேரன் றனைநிகர் தஞ்சை நிலவிய சீ
ரதிசெயமாசி னருந்தவ மேயுரு வாகவந் ந்,

துதிசெயரும்புகழ் சால்தம்புசாமிச் சுகுண! மனக்
கதிசெய மீதென் றுரையன்பென் பால்வர வாய்ந்தருளே.

சந்தவிருத்தம்.

கம்புலா மலர்த்தடங் கவின்செய் தஞ்சை வாழுநந்
தம்புசாமியென்பெயர் தயங்குறுந் தராதிபா!
இம்பரொன் னரும்பெறல் எனக்குநின்ற னன்பதே
யும்படிக் கருள்கவென் றிரங்குமென்ற னெஞ்சரோ.

நேரிசைவெண்பா.

தந்தைசொன் மிக்கவருந் தாய்சொலென்றே யெளவைதான்
முந்துரைநீதிச்சொன் மொழிகிங்ஙன்—நந்த
விலாவிலக்கி யந்தம்பு சாமியென் றன்பி
னெலாவுலகஞ் சொல்லு மிசைந்து.

சேசு பதமன்றிச் சிந்தைசெய் யாமனத்து
மாசில்தம்பு சாமி மகிபாலா—நேச
மலது பிறிதொன் றடியேன் விரும்பேன்
நிலனிடங் கண்டாய் நினைந்து.

---

இராயபுரத்திலிருக்கும்.

## ச. ச். அந்தோனியப்பநாயக ரவர்கள்மீது

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பரிதிதன்றேர்க் குரகதக்காற் படத்தெங்கின் காயிளநீர்ப்ப
ணேசே ருக்கும், அருமைசெறிவளங்கெழுமு சத்திமங்கலப்பதி
யி னழற்குலத்து;வருதிவா கரன்மரியின் குழவியையுள் குறுநெ
ஞ்சம் வாயந்தோனிக்,குரிசிலென்பாலெஞ்ஞான்று முன்னருள்
கூரும்பரிசு கூட்டுவாயால்..

நேரிசைவெண்பா.

சத்திமங்க லத்துச் சவரிநா தேந்த்ரதுரை
நற்றவத்தில் வந்த நவமணியே—இத்தருணத்
தென்பா லிரங்கினையே லெஞ்ஞான்று முன்பெருமை
யன்பா வழுத்தாதார் யார்?

மனனுணர்வாற் சாலமோன் மன்கொடையாற்றேயில்
எனநில வந்தோனி யெனுநம்—வனியகுலச்
சீமானற் சத்தியவே தாசார மாசீலக்
கோமான் குறையுளதோ? கூறு.

கொடையாளி யெவான் குலவுமென்ன் மேலோர்
நடையா தலினங் நலனோர்ந்—திடையாவன்
பாலீய்ந்தான் யாங்கள் பகருமந் தோனியென்
மாலேமிகவு மகிழ்.

கட்டளைக் கலித்துறை.

வாயா லனந்தனுங் கூறகில்லாப்புகழ் வாய்ந்தநங்கள்
சேயாமந்தோனித் துரைமகிபாலன் சிலம்பிலிவன்
வெயாலரியா னறுங்கோங்கினுன் மிக்கவேதனையுந்
றுயாலரிதுநின் றன்மருந்தாலன்றி யாருயிரோ.

செந்தா மரைத்தடஞ் சூழ்சத்தி மங்கலஞ் செய்தவமாம்
அந்தோனியென்று மபிதானவள்ள லணிவரைமேற்
கொந்தார்குழலாண் மிடைந்தேயன்றேனுட் குறிப்பையியற்றுஞ்
சிந்தாகுலத்தினிற் கல்விக்கென்பகல் நேர்ந்தனளே.

வஞ்சனைநீப்பெற்ற நெஞ்சினர்வாழ்த்து மந்தோனியென்னும்
எஞ்சில் புகழ்மலி யுங்குணசாலியை யெய்ந்தவனைத்
தஞ்சமென் றோர்பெறும் பேறிதென்றோதத் தகுவதன்று?
விஞ்சுநந் தேடன் விரப்பாற் பிலவோர்ந்திருந்தனளே.

---

காரைக்கால்,

## ச. அமிர்தசாமிபிள்ளை யவர்கள்மீது

:0:

கட்டளைக்கலித்துறை.

கங்கைக்குலத்து வருஞ்சவரிக்குட் டான்முதியோரைக்
சங்கைக்குரிய வர்ச்சித்திடவைப்போற்றுந் துரைவந்த
செங்கைக்குக் கற்பக நாணுநின்மோயங் கினம்பெருமை
என்னைக் கமுதசாமித்துரை யேதுரை யோதுகைக்கே.

எழுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மடந்தையர் நிதம்பத் தேருக் கன்றன்
வளமலி பொற்றையா முருகை
யிடம்பொலி தேரை நகுதரு காரைக்
காவில்லுறு மிருப்பதி வேளாண்

மடந்தபு குலத்து வாணனைப் பொருவ
வயங்கமிர்த சாமியா மாலே!
கடந்தவன்பென்பால் நல்குதியாலென்
றடைந்தனன் கரிசினின் னிடனே.

## நடுவெழுத்தலங்காரம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

பெண்பிரிய மருத்துவகை யொன்றின்பேர்
சமீபந்துன் பிகந்த ஞானங்
கண்ணியவோர் முனிவன்பேர் வேற்றுமையின்
வடிவஞ்சா யகமெனற்கு
நண்ணுரு பொருட்பொலிவி னடுவெழுத்தா
மமிர்தசாமிப்பேர் நல்லோய்
புண்ணிய மெலாந்தடித்தோ ருருக்கொண்டா
லெனவயங்கும் புனிதமாலே.

வனிதை
அன்பு
அபின்
அணிமை
ததீசு
உருபு
அம்பு

---

சென்னைமாநகரம்,

முனிஸ்பால்வைஸ்பிரஸிடெண்ட்

## பழவை, இராமசாமிசெட்டியாரவர்கள்மீது

ஐம்பத்தாறுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கார்கொண்ட நெட்டிதழ்க் கமலத்தணங்குதன் கவினுரங் கொண்டமுதல்வன், கஞ்சனைச்செற்றுமோர் கஞ்சனைத் தருமிணாங் கஞ்சக்கரத்துமாயன், களிற்றினைக்கொம்பொன்றி னூற்றடிந்தோலிடு களிற்றினைக் காத்தபரமன், கழறுபுன்கூனியை வருத்தியோர்கூனியைக் கலந்தன்புகொண்டவுரவோன், கங்கைதருபாதாம்புயத்தினாலோர்கருங் கல்லணங்காக்குமிறைவன், கணிச்சிவானவன்வில் லொசித்துமிதிலேசன்கனங்குழையைவேட்டபெருமான், கண்ணானனிலன்வரும் யாதவகுலத்தினான்கலையெலாம்பரசுமன்னானன், காலையெக்காலுமறவாத மனனக்குலக்ண்புடவிசெய்தவத்தால்,

ஏர்கொண்டபடிவுகொண் டன்னானெழிற்சென்னை யெய்ங்கிடும்பெருமைசாலும், இராசதானியின்வித்தி யாசாலை தன்னில்நன் கியற்றமிழ்ப்புலமை தன்னுள், இசைந்திடுந்தலைமையை

நடாத்திடும் புலவனறி வினிலிசைகொள் சேடனன்னான், இல
குபரிமேலழகர் முதலாயவுரையாள ரீண்டுருக்கொண்ட தொப்
பான், இறைமைசால்கம்பரா மாயணத்துட்பொரு ளிறும்பூது
கொளநல்குவோன், என்கணனே யானியற் றமிழ்நாவ லோரோ
றெனப்புகல வந்தநிபுணன், இராசகோபாலதேசிகனையேத் தன்
பர்த மிரும்பாதமேத்துமன்பார், இதயநாராயணச் சாமிநாவல்
வனின் றெழுதிவரவிட்டநிருபம்,

பார்கொண்டபுகழ்மலி தரும்வக்வமுனிவனும் பாற்கடலில்
வந்தபெரியோன், பரும்பொருட்குவைதரும் கிட்கிந்தமாலையா
ன் பதிநிலையினெஞ்சமலையான், பூமரபம்பாநதி யெனும்பெயரி
னாற்றினன் பசித்தவர்க்கன்பாற்றினன், பமரங்குலாங்காந்தள்
மாலையான் அன்பர்தம் பணிசெயுங்குணமாலையான், பைந்நாக
மென்னுமாமுரசினன் உமைபங்கன் பதுமமலரடிபரசினன், ப
ணிகண்டுவெருவுபுட் கேதனன்பதுமைவளர் பைம்மாடநனிகே
தனன், பலருந்தன்வாசல்முன் பழவையான்பரவைநனி பணில
முத்தின்பழவையான், பைம்பொன்முடி அரசர்பின் வருராம
சாமியாம் பைந்தருவெதிர்ந்துகாண்க,

நீர்கொண்டமாமுகி னிகழ்த்தினீ செஞ்சாலி நேருநான்பா
ற்கரனுநீ, நீர்மைசெறிகமலநா னிலவுநீ குமுதநா னேரிலாத்தா
தைநீநான், நிலவுறும்மகவுநீ யன்னைநான்புதல்வனீ நிகழ்த்துறு
ந்தேனுவஃதின், நீடுகன்றேழையே னீசென்னைநகரத்து நிகழ்
விசாரணசங்கமாம், நீதிபுனைசபையினில் வைஸ்பிரசிடெண்
டென நிலைமைபெற்றோங்கினையிவண், நெடும்போழ்திலம்பாடெ
னுஞ் சூறைவன்காற்று நெடிதலைப்பத்துரும்பா, நீணிலத்தின்
ஞான்று மனவாட்டமெய்தியே நெஞ்சுருகினின்முன்றில்வாய்,
நின்றேனைமுன்னவிலுமரபினோர்தொழிறந்துநிற்கவருள்புரிவை
யென்றே.

### நேரிசைவெண்பா.

பராவருஞ் சீர்வசியப் பாற்கடலிற் றோன்றித்
தராதலமேத் தத்திகழுந் தக்கோன்—கராங்கடிந்த
மாயனேர் நங்கண் மணிராம சாமியெனுந்
தூயனையே நெஞ்சமே! சொல்.

---

 வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

சென்னை, கவர்ன்மெண்ட் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட்
சீப் அகௌண்டாண்ட்

## மாவண்டூர், தியாகேசமுதலியாரவர்கள்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மருப்பங்கயத்தடஞ்சூழ் மாவண்டூர் செய்தவமாவந்தனைவ த், திருப்பங்கயத்தவனுங் காணுதவரனருளிற் றிளைத்துவாழும், விருப்பங்கயத்தவனை வில்லியடியவராருளும் வியக்கப்பெற்றோய் திருப்பங்கயத்தமலை தருஞ்செல்வத் தியாகேசச் செல்வேள்கே ண்மோ.

நின்கொருநான் விண்ணப்பஞ் செய்வதலைதிஞ் ஞான்றிங் தநீணிலத்தின், மனக்கொன்றுந்தகாததுவன்றலைதினியுன் னருள் பெறுவான் மதித்தன்றே, தனக்குன்ற மாவடையுந் தனதனிகர் தனிகசிவர் கமங்கள்தேர்ந்திட், டினற்கருமந் நெறியொழுகிப் புகழுடம்பி னினிதுலவு மொருவனென்றே.

நேரிசைவெண்பா.

அமலத் தியாகேசற் கன்புசெய்மா வண்டூர்
சுமனத் தியாகேசத் தோன்றல்—எமது
குறையகல வேண்டிக் குறுகினே னென்றன்
முறைசெவிம டுத்துதவு முன்

---

சதுரங்கபட்டணத்தைச்சார்ந்த மெய்யூர்
மணியம், முனியப்பநாயகர் குமாரராகிய

## முருகேசநாயகரவர்கள்மீது

நேரிசை வெண்பா.

திங்கள் வெதும்பிசுடா தென்றலுளம் பாய்ந்துசுடா
கங்கு லிருளுங் கலந்துசுடா—கங்கைக்
கரைபாயு மெய்யூர் கதிக்குமுரு கேசன்
புரையொழித்தென் னைப்புணர்ந்த போது

என்னத்தைச் சொன்னாலு மென்னத்தைச்செய்தாலுந்
தென்னத்தைச் சொல்லிமனஞ் சோர்கின்றாய்—மன்னன்முனி
யப்பனள்ளல் சேயென்பான் ஆமென்பான் [illegible]
செப்புதல் சொன்பான் நினைத்து.

விசையன் விறல்விதுரன் வீட்டுமன்குபேரன்
திசைபுகழ்கன் னன்குமுணன் சேடன்—இசையார்ந்த
வல்லமுரு கேசதுரை வள்ளலுக்கு வென்குறையைச்
சொல்லவிது நாளளியீர் தூது.

அறியு முயிரொவ்வையும் ஆண்டகையென் பார்போல்
உறுசையா வுங்கையென் றேதேன்—அறம்வளர்க்குஞ்
சீர்முருகேசன்கமல செங்கையே கைமற்றை
கார்பனங்கை வேங்கைமுருங் கை.

கட்டளைக்கலித்துறை.

கேட்டே னினிவிடமாட்டேன் கிளரொளிக் கேழ்வடத்தில்
தோட்டேன் வருமலர்ப் பாட்டே மிழற்றுஞ் சுரும்பினங்கள்
ஆட்டே விரும்பிய கோட்டே யுயர்வரையம்புயனே!
நாட்டேழு சீர்த்தி வளர்முரு கேசவென் னாயகனே.

---

நாகலாபுரம், கௌரிகுல வீராசாமிநாயுடு
குமாரர்,

## இராசகோபாலதாசர்மீது

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

விண்ணின்மதி மிகையெனநின் றிலங்குமுகத் தெரிவையர்போல் விழைந்துமஞ்ஞை, நண்ணிநட நவில்நாக லாபுரத்துக் கௌரிகுல வீராசாமிப், புண்ணியன்செய் மாதவமே யோருருவாய் வருபுதல்வா! புகழ்துழாய்த்தார், கண்ணனிணை யடிமறவா இராசகோபாலதா சரசேவாழி.

---

சிறுநாவூர், அன்னப்பரெட்டியார் குமாரர்

## வேங்கடராய ரெட்டியா ரவர்கள்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மாலூருங் கற்பகநாட் டிறைமுதல வமரரெலா மகிழ்வி னேத்துஞ், சேவூரும் பெருமானைச் செஞ்சடையின்மதியூருஞ்சிவபி

ரானே, நாவூருஞ் செந்தமிழ்க்கு நலமளித்த பெரியோனே நயக்குஞ் செல்வ, மாவூருஞ் சிறுநாவூர் வேங்கடரா சேந்த்ரநனி வாழ்க மன்னே.

---

## திரிசிரபுரம், அருள்ளானந்தம்பிள்ளை குமாரர்

## சின்னசாமிபிள்ளையவர்கள்மீது

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்

சாரப்பாப்புலவர்வரிற் சிந்தைமகிழ்ந் தன்புகொடு தண்டஞ்செய்து, பாரப்பா கிலேரசிதம் பொற்பரிசு பொழிதிரிசிரப் பேர்கொண்ட, ஊரப்பன் பெருங்கொடைசின்னச்சாமிகன்னனென வுதிக்காவிட்டால், ஆரப்பா வென்பாரார் ஆரப்பா செந்தமிழி னருமைதேர்வார்.

---

## புதுவை, சவரிமுத்துராயமுதலியார் அவர்கள்மீது

நேரிசைவெண்பா.

வாய்மைமிகும் புதுவை மான்மரிசூசைத்தவத்தின்
சேய்சவரி முத்தேந்த்ர சீமானே! நீயெளியேன்
மீதெஞ்ஞான் றுங்கருணை மிக்கூர்ந் திருந்திடவெப்
போதலரு மோகின்னுட்போது

---

## இராயபுரம், சுதரிசனதாசரவர்களியற்றிய

### கண்ணன் சரித்திரக் கீர்த்தனைக்கு.

நேரிசைவெண்பா.

கண்ணன் சரிதம் கடல்சூ ழுலகின்மிசை
உண்ணயந்து கீர்த்தனமா யோர்ந்துரைத்தான் – வண்ணமணி
மாடஞ்சே ராயபுரி மன்னுஞ்சுதரிசன
நீடாந்தர கவிஞ னோர்ந்து.

## தஞ்சைமாநகரம், மகாவித்வான்
## சதாவதானி
## ஸ்ரீமது. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் மீது

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பூவிலுயர் திருத்தஞ்சை வாழ்சுப்ர மணியனெனும் புலவா? நான்கு, பாவிலுயர் வெண்பாவு மெப்பாவும் மூவினமும் பரிசோ டேற்றுங், கோவிலுய ரவதான மொருநூறும் நீயுஞற்றுங் கொ ழுமைகேட்டு, நாவிலுயர் சேடனணி யுடல்விளர்த்துத் தாழ்ந்த னெனி னவில்வதென்னே.

---

## ஜீயர்குளம், பாலகவி - தெய்வநாயகப்பெருமாள் நாயகரவர்களாலியற்றப்பட்ட
### வானமாமலைச்சதகத்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

புயலனைய புயக்கொடைஞ ரொக்குறுமா முநிக்கரசன் போல்வா னீடும், வயறடங்கள் செறிமதுரைத் தெய்வநா யகப் பெருமா ளெனுநாமத்தோன், உயுமரவத் துடலினும்பாற் கடலி னுந்தண் ணடையினிலு முறங்குபெம்மான், இயல்வளஞ்சேர் வானமா மலைச்சதக மெனுமொருநூ லியற்றினனே.

---

### ஷை யார் பாடிய வானமாமலை அலங்காரக்
### கொம்மைப்பாடலுக்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மெய்வருநான் மறையோர்ந்த பூசுரரு மீசுரரும் வியந்து போற்றக், கைவளைவி லீசனுமங் கயற்கணியுந் திகழுசினகரஞ் சேர்கூடற், றெய்வநா யகப்பெருமா ளுரையலங்கா ரக்கொம் மைத் தேனையுண்டோர், தைவருமெய் யானந்தத் தடங்கடலுட் படிந்துமுத்தி சார்வர்மாதோ.

---

கஅ வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

ஷெயார் இயற்றிய திருக்குருகூர் மாறன் யமகவந்தாதிற்கு

கட்டளைக் கலித்துறை.

நாலா யிரத்தின் வழுத்தீர்த் தருளிய நாதமுனி
போலா யிரங்கவி சொன்மாறன் றுளிணை யிற்புனைந்தான்
பாலா யியமக வந்தாதி தன்னைப் பகர்ந்த தொற்றை
மேலா யியங்கும் படித்தெய்வ நாயக வேந்துதித்தே.

குமாரமுத்துச்சடை ஈஸ்வரனொன்னும்

ஆண்டிச்சுவாமியின்மாணுக்கர்

சித்தமக்கவிராயரவர்களியற்றிய

சிதம்பரஸ்தவத்திற்கு

சந்தக் கலிவிருத்தம்.

சுத்தசை தன்னிய மாய்த்தொடர் கிற்கும்
அத்துவி தப்பொருள் வாழ்வமர் தில்லை
நற்றவ மொன்று நயந்துரை செய்தான்
சித்தம னென்னவரு தேசிகன் மன்னே.

சதாவதானம்,வாலசுப்பிரமணியஐயரவர்கள்இயற்றிய

பொய்சொல்லா மெய்யர்பதிகம் நான்மணிமாலை

இவைகளுக்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

முந்நீரோ ழுடையுடுத்த வவனியிடைக் காரைநகர் முன்னி வாழும், பொய்ந்நீர்மை யில்லாமெய் யனுக்கோர்நான் மணிமாலை புனைந்து தந்தான்,செந்நீர்மைவழிநின்று மறைமநுவாலெச் சங்கள்செய்யுநீரான், மெய்ந்நீர்மை குன்றுநம் வாலசுப்ர மணியனெனு மேதக்கோனே.

## பெங்களூர், சு. இராமசாமிபுலவர் இயற்றிய பரத்துவதியானகீர்த்தனைக்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

சைவர்கடஞ் சிவசமய நெறியென்பார் நாரணன்றன் சமயத்தோர்கள், பொய்யில் விசிட்டாத்துவிதப் பொருளென்பாரேனையர்தம் பொருளேயென்பார், பெய்யருளங் கடற்கடவுணிலையுணர்வார்க் குறைவிடமாம் பெங்களூரிற், சையிகவி ராமசாமிப்பரத்வ தியானகீர்த் தனையைமாதோ.

## அஷ்டாவதானம். பூவை, கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றிய திருவொற்றியூர் தியாகேசர்பதிகத்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

நற்றவத்தோர்க் குறைவிடமாந் திருவொற்றி யூர்தியாகர்நளினத்தாளிற், குற்றமினற் பதிகப்பா மாலையிசைத் தனன்சைவ குலகாம்பீரன், புத்தவே டனுமூரன் மாலண்ணு சாமிதவம் பொலிகுமாரன், பத்திமிகுங் குணசீரன் கல்யாண சுந்தரவேள்பர்வல்லோனே.

நேரிசைவெண்பா.

ஒற்றியூர் தியாகற் கொருபதிகஞ் செப்பினனே
நத்துமண்ணு சாமி நதிகுலமான்—முற்றுதவத்
தூலன் கலியாண சுந்தரவே ளென்னுமொரு
பாலன் றமிழிற் பரிந்து.

## திருக்கழுக்குன்றம்,கந்தசாமிமுதலியாரவர்களியற்றிய ஞானனந்தசிந்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

நந்தூரும் வயற்கழுக்குன் றினிற்கங்கை குலமுனுற்றுநற்றவத்து, வந்தூரும் பேருமிலா வொருவனர னென்றுணர்ந்துமகிதலக்கு, முந்தூரும் ஞானநிலை யினைக்கந்த சாமிமுகில் முனைந்து ஞானச், சிந்தூரு மறிந்திடப்பெய் திட்டதுமோர் வியப்பிற்றோ ?தெரியுங்காலே.

தஞ்சை,ஷட்டாவதானி வைரக்கண் வேலாயுதப்புலவ
ரியற்றிய நச்சுப்பொய்கை விலாசத்திற்கு

எழுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

செஞ்ஞீல மலர்தஞ்சை நகரில்வந்த செல்வவைர க்கண் வேலாயுதக்கோன், இஞ்ஞாலத் தவர்க்குநச்சுப் பொய்கையின் சீரின்பவிலா சமதாக்கி யீந்தானல்லன், அஞ்ஞானப் புதையிருள்சீத் தெமதுள்ளத் தமர்கண்ண னன்றிமற்றோர் முதற்றே வில்லென், மெஞ்ஞானந் தலைசிறந்து வினைவிட்டி வீடுபெறு மொருநெறியை விளக்கினனே.

ஷையா ரியற்றிய திருக்குறிப்புத்தொண்டநாயனார்
சரித்திரக்கீர்த்தனைக்கு

குறள் வெண்பா.

திருக்குறிப்புத் தொண்டர் செழுங்கீர்த்தனமீங்
குரைக்கவுரு காருமுளரோ?

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சட்டாவ தானிவை ரக்கண்வே லாயுதமுத்தமிழ்வல்லோர்க்குத், தட்டாதிந் நூலியற்று போழ்தடிசிற் குதவிசெய்தச்சிட் டுத்தந்து, ஒட்டாரங் கைபிடித்தா னூலரங்கேற் றவையிடத்து முதவிசெய்யத், தெட்டாரோ காலிமர போங்குதியாக ராயனெனுஞ் செவ்வேண்மன்னே.

ஷையா ரியற்றிய செவிபூடணோற்ஸவாரம்ப
பாசுர குஞ்சத்திற்கு

அறுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சவைபூட ணச்சென்னை வேப்பேரி வாழ்அண்ணு சாமி வள்ளற், றவபூட, ணப்புதல்வன் முருகேசப் பிள்ளையின்சொற் சமுகந்தன்னிற், செவிபூட ணோற்சவா ரம்பபா சுரகுஞ்சந் திறத் தளித்தான், கவிபூடணன்வைரக் கண்வேலா யுதப்புலவன் கருணைமாலே.

ஷையாரியற்றியபஞ்சரத்தினத்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

இடுக்கணொழித் தினருள்பெறு வானிறைவி யுண்ணமுலைத்தாய்தண்சீர், அடிக்கணொரு பஞ்சரத்தினமா மலங்கலிசைத்தருள்தியென்ன, வடிக்கும் வேலூர் கிருட்டி ணச்சுவாமி சேய்வரதப்பிள்ளை வேண்ட, உடைக்கும்வை ரக்கண்வே லாயுதநா வலரே றுரைத்திற் றன்றே.

நேரிசை வெண்பா.

காதி னுழைந்து கருத்தாதா னித்தேறிப்
பேதமையைப் போக்குகின்ற பெற்றியால்-வேதப்
பொருளாமுண் ணமுலைத்தாய் பொற்சரண்பா மாலைக்
கருள்வாரிங் காரோ? அஆ.

---

சென்னை, இராயபுரத்திலிருக்கும் சோதிடர்

புபு. உருத்திரகோடிப்பிள்ளை யவர்களியற்றிய

பழனி வழிநடைச்சிந்திற்கு

நேரிசைவெண்பா.

மாதிடங்கொண் டோன்பயந்த வான்பழனி யான்றலக்கு
மாதிடங்கொண் டோர்சிந்து மாநிலக்குச்—சோதிடரி
லுன்னப் பொருவி லுருத்திரகோடிச் செப்பல்
என்னற் புதமென்பேன் யான்.

---

புதுவை, கா. ஷடாக்ஷர ஆரியரவர்களியற்றிய

அதிபத்தநாயனார் சரித்திரகீர்த்தனைக்கு

நேரிசை வெண்பா.

கதிபத்த ரைப்பரவுந் தன்மையெனக் கண்டோர்ந்
ததிபத்தர் சீர்த்தி யனைத்தும்—புதுவைச்
சடக்கரவேள் கீர்த்தனமாச் சாற்றினன் யாரும்
கெடக்கருதா வண்ணங் கிளர்ந்து.

---

திரு. ச. கண்ணுசாமிமுதலியார் பார்வையிட்ட
ஆனந்தநாதகுரு தேசிகேந்திர சுவாமிகள்
பதிகத்திற்கு

நேரிசை வெண்பா.

ஆனந்த நாதற் கணிபஞ்ச ரத்தினமாந்
தேனிந்தத் தேயத் தவர்ப்ருக—ஞானந்தோய்
கண்ணுசாமிக் கவிஞன் கைப்பிழைதீர்த் தச்சிட்டான்
நண்ணுவோர்க் கன்பாநயந்து.

சென்னைபிள்ளாக்டவுண் ஐஸ்கூல் என்னும்
வித்தியாசாலைத்தமிழ்த்தலைமைப்புலவராகிய
இராயபுரம்,

அ.ச.ஜெகராவுமுதலியா ரவர்கள்
ஞானானந்த புராணம் அச்சிட்டதற்கு

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நவிலருஞ் சத்ய மறைதனிற் பயின்று நாவலோன் தோம்பிலிப்பிசைத்த, கவிகளா லாஞா னாநந்தமென்னுங் காவியத்தினில் வழூக்களைந்து, புவிதனிற் கற்றோர் வியப்புற வச்சிற்பொறித்தனன் ராயமாநகரான், அவித்ருவானக்குருகுலசெகரா வாந் தமிழ்ப்புலமை சான்றவனே.

ஷெயரார் இயற்றிய இலக்கணசிந்தாமணிக்கு

எண்சீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

பூமகளின் கீழொளித்தா னனந்தன்செவ்வி
பொதியமலைக் குகையொளித்தா னகத்தியன் செந்
நாமகளு முடல் விளர்த்தாள் குருவோநாணி
நவக்கிரகத் தொன்றானா னினச் செந்தாட்
டேமகள்வாழ் மெய்யகத்தன் சவரியப்பன்
றிருப்புதல்வ னிராயபுரன் குருகுலத்துக்
கோமகள்சேர் செகராவாந் தமிழ்த்தண் சங்கங்
கொழித்த விலக்கண சிந்தா மணிநூற்கண்டே.

இராயபுரம், பிரிசர்ச் மிஷன் உபதேசியார்

## பொ. சாமுவேல்சுந்தரமென்பவருடைய

திருவிவாகமகோற்சவமங்களவாழ்த்து

நேரிசை வெண்பா.

சீர்பெற்ற வஞ்சுகச்சொற் றேவமக ளீர்வாழ்த்தும்
பேர்பெற்ற பெண்மணிநா கோமியம்மாள்-தார்முற்றுங்
கொண்டாடச் சாமுவேல் சுந்தரற்குக் கொத்தலர்பூ
வண்டார மாலையிடல் மாண்பு;

சொற்கொண்ட தேவ சுதனடிபொன் சாமிதவச்
சொற்கொண்ட சாமுவேல் சுந்தரவேள் - விற்கொண்ட
நாகோமி யம்மாளை நன்மணஞ்செய் தென்றென்றும்
வாகோடு வாழ்க மகிழ்ந்து.

---

## பு. அ. மிக்கேல்சாமிசெட்டியாரவர்களியற்றிய

இராஜதூதன் என்னும்நூலுக்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

அட்டதிசை யரசர்முடி மணிமகரந்
தப்பொடிக ளாரும் வாயல்
கட்டழகன் பிரின்சாப்வேலுலகமெங்கும்
பவனி வந்த காரணத்தைத்
திட்டமுடன் றமிழ்நடையி லியற்றி யச்சிட்
டான் புதுவை சென்னை மிக்கேல்
செட்டி ஐய லெனும்புனிதன் றவபபேருய்
விளங்குகுண செல்வன் மாதோ.

---

"செயின்ற் மேரிஸ்காலேஜ்" தமிழ்ப்பண்டிதர்

## பு. த. செய்யப்பமுதலியா ரவர்களியற்றிய

மும்மணிமாலைக்கு

நேரிசை வெண்பா.

சீரார் புதுவைநகர்ச் செய்யப்ப வேளின்று
நீரார் மதுரை நெடுந்தகைமேல்—பேரார்
குலவும் மணிமாலை கூறிப் புகழை
நிலவப் புரிந்தா னிலத்து.

---

உசு வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

ஷெயார் பிரசங்கத்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்விளங்குங் கலைதெரிநஞ் சவேரிநாதத்
திருப்புலவன் சிறக்கச் செய்த
பேர்விளங்குந் திருவருளா னந்த
மாலையை யிங்ஙன் பிரசங்கிக்க
ஏர்விளங்கும் புதீவைவரும் செய்யப்ப
நாவலனு னியைவ தன்றிப்
பார்விளங்குஞ் சத்தியவே தந்தெரிந்தோ
ரும்முணர்ந்து பக ரொணுதால்.

---

## காரைக்கால், பி. ஆரோக்கியசாமி பிள்ளையவர்க

ளுடைய திருவிவாக மகோற்சவ மங்களவாழ்த்து.

இருபத்தெண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மணிகொண்ட கடல்புடை யுடுத்தபுட வியன்மன் னுயிர்த்தொகையின்வெம்பவக்கா,வளைபடுமலைக்குநே ரெனமாடமாளிகைகள் மல்குபெத்லேமிலன்று, மரியன்னை மணிவயிற்றுதயமாய்க் கபிரியேல் மாத்தூதன் வரவுணர்த்த, மனுவுருக்கொண்டவம் மாண்டிபராவுசீர் மருவுகங்காகுலத்தில்,

கணிகொண்ட செல்வநவ நிதியன்றியறியாத கவின்கொள்மன் னவர்பின்னரொக், காலுமுறைதருமெழிற் காரைக்காலென்பெயர் கழன்றிடவேயாசுமுதலாங்,கவிவலோர்கவியெலாந் தன்பெயரிலங்குறக்கண்டபிலவேந்திர விந்திரன், காசினியின் முன்குயிற் றியபெருந்தவமெலாங் கான்முளையெனுவந்ததென்,

றணிகொண்டவகிலமுர,,சறையவருபுண்ணிய ரோக்கியசாமி யென்னும்,அதிவிற்பனன்கல்வி மிகுசுப்ரதீபனுங்காமனுங் கண்டுமகிழும், அங்கற்பகக்காம னும்மஞ்சநனிதுஞ் சலர்த்தடமிகப் பொலிதரூஉம், அரும்பதிகருங்குழியி னல்லறப்பகுதியெனல் யாவுமோராகாரமாங்,

துணிகொண்ட சீர்த்திபெறு மெங்களண்ணுச்சாமி துரையின் மகவாய்க்கற்பெலாந்,துதையுமுருவாய்க்கல்விகேள்வியெல்லாமொரு தோற்றமா மாச்சிக்கணும், சொல்லருங் குணசாலியுந்தோ மிகந்துலக சுகசெல்வ வாழ்க்கையோடு தூயவர் கொண்டாடவே செயமணம்புரியுமா சுபங்கண்டு வாழ்த்துவமரோ.

கட்டளைக் கலித்துறை.

பூச்சக் கரம்புக ழுங்காரைக் காலிற் புலவர்க்கெலாம்
பாச்சக் கரவர்த்தி யேத்துங் குலன்வருபாக்கியமென்
ருச்சக்க ரேசநின் கீர்த்தியைச் சொற்றிங் ககமகிழ்வார்
ஆச்சக்கண்ணுளொடு நீ கூடிவாழ்ந்திடு மன்புகண்டே.

நேரிசைவெண்பா.

ஆரோக் கியசாமிக் காச்சிக்கண் ணுக்கென்றும்
பேரோ முதலெழுத்திற் பேசுங்கா-னேரோயிங்
கொத்தவெழுத் தாதலினு லொத்துமன முற்றுலகி
னித்தனையே வாழ்த்துவார் நின்று

---

## புதுவை, ஞர். முத்துச்சாமிபிள்ளையவர்களியற்றிய சனிக்கிழமைப்புதுமை கீர்த்தனைக்கு.

———:o:———

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

பனிக்கலைம்மா மாதிசுலாம் பொலன்மாடம் பலகெழுமிப் பரிதியன்ன, நினைக்கரும்வாய் மையின்மாந்தர் வாழ்மனைசால் புதுவைநக ருலாவு சீர்த்திப், புனற்கங்கா குலதிலக னுழுத்துச் சாமிப்பேர்ப் புனிதனிக்காற், சனிக்கிழமை புதுமையெனுஞ் சரிதையைக்கீர்த் தனைநடையாச் சாற்றினுல்.

துதிமிகுசத் தியவேத சாக்ஷிகணற் சரிதமதைச் சொல்வர்காரி, புதுமையென வதனைநா டகத்தமிழின் முத்தமிழ்தேர்புலவோர் மெச்ச,முதுமொழிவாய்ப் பப்பகர்ந்தான் புதுவைவளர்ஞானியெனு முதியோன்றந்த, மதலைமுத்துச் சாமிகவி வலவனறிவானனந்த னனையான் மன்னே.

ஷையா ரியற்றிய வியாகுலமாலைக்கு.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

'தூயதமிழ்க் கலைபயின்றிட் டிலங்குமுத்துச் சாமியாந் தோன்றலென்பான்,மாயிருஞா லம்பழிச்சக் குயிற்றியிடு வியாகுலமாமாலையைக்கேட், டாயகருப் பிரதத்தோ டன்பான்முக் கனிகலந்திட் டருந்திறைலு,மேயவிதை நிகர்த்திலதே லிதற்கிஃதொப் பன்றிவிரித் துரைப்பதென்னே.

உசூ வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

நேரிசை வெண்பா.

சீர்கொண்ட தென்புதுவைச் செல்வன்முத்துச் சாமியெனப்
பேர்கொண்ட நாற்கவிஞர் பெம்மானி-னேர்கொண்ட
செந்தமிழ்வி யாகுலமா மாலைத் திறமுரைக்க
வேந்தரமா மோ? விங் கினி.

---

ஈகூர் வெங்கடாசலமுதலியார் குமாரர்,

## சுப்பராய முதலியாரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

குஞ்சரக் கோட்டு வரிமுலை யீர்மதன் கோத்துவிடுஞ்
செஞ்சரந் தேர்பரி பேரிகை தண்குடைச்சிறலினுல்
வெஞ்சுரக் கிாம விடாயது தீர விளித்தருள்வீர்
தஞ்சமென் றோர்க்கரு ளீகூர்சுப்ராய தனதனையே.

---

## பாக்கம், இரங்கசாமி முதலியாரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

திருவருட் பாக்கந் திருவேங்கடமால் செயுந்தவங்கள்
ஒருவுருக் கொண்ட வெழில் ரங்கசாமி யுயர்நலமே
பெருவுருக் கொண்டென் முனம்நிற்ப தான்மதன் பெய்சரங்கள்
அருகுறைந் தென்செய வல்லதுசொல்லுக ஆயிழையே.

---

சென்னை முத்தியாலுப்பேட்டை ஐஸ்கூல் உபாத்தியாயர்,

## பா. பெ. சுப்பரார்வுநாயுடு அவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

சொல்லாளு வாரும் புவிபொரு ளாடவர் தோயுஞ்சந்தப்
பல்லார மேரு மலைமுலை வேல்விழிப் பாங்கியரே!
சல்லாப னும்பெரு மாள்சேய் சுபுராவ் தராபதிக்கு
எல்லா மறியச் சொலுவீர் விரக மெழுமுனமே.

ஷையார் சோதரர்,

## பா. பெ. ஜானகிராம்நாயுடு அவர்கள்மீது.

———:o:———

கட்டளைக் கலித்துறை.

பாப்பான் குளம்பெரு மாள்சாமி நாயுடு பற்றுதவங்
காப்பான் கதித்தசேய் ஜானகிராமென்னுங் கர்னனரும்
பூப்பான காலத்து நேயனன் கொவ்வைப் பொலியிரசத்
தேய்ப்பான முண்டு மகிழ்தரச் சேடிகாள் செப்புகவே.

———

## ஆ. அண்ணாமலை முதலியாரவர்களியற்றிய
விநாயகர்பாமாலைக்கு

———:o:———

நேரிசை வெண்பா.

தேமாலை வாழிசூர் செல்வ விநாயகன்மேற்
பாமாலை பாடிப் பரிசுற்றான்—மாமாலை
நண்ணார் திசைக்கீர்த்தி நம்ராம லிங்கனருள்
அண்ணா மலைப்புலவ னய்ந்து.

கலி விருத்தம்.

பாவின் முற்றிய பல்சுவை மேவிய
நாவின் முற்றிய நம்பி யண்ணாமலை
தேவின் முற்றிய செல்வற் பழிச்சலின்
கோவின் முற்றிவர் கொண்டிஃ துரைப்பரோ.

———

சென்னைமா நகரத்திலிருக்கும்,

## பு. வேதாசலநாயகரவர்கள்மீது.

———

கட்டளைக் கலித்துறை.

பாரோங்கும் புன்னமை யூருடை யான்கவிப் பண்ணுடையான்
சீரோங்கு சம்பு முனிகோத் திரன்மால் திரண்டெழுந்த
வாரோங்கு மென்முலை மாதே வேதாசல மன்னவன்மேல்
போரோங்கு மையலுற் றேன்மதன் வாளி புறப்பட்டதே.

———

இராயபுரம்,

## மு. இரத்தினவேலு நாயகரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

பொன்மா மகளு மகள்வளர் ராய புரம்வசிக்கும்
நன்மாவிரவு முனியப்ப நாயக னற்றவத்தின்
றன்மா திகளுருக் கொள்ரத்ன வேலெனுந் தண்ணளியன்
முன்மா வெழிற்றத்தை காளென்றன் மோர்க மொழிகுவிரே.

சென்னைமாநகரம் முத்தியாலுப் பேட்டையிலிருக்கும்
வேதாந்த பிரசங்கியார்,

## அ. முனிசாமி நாயகரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

பூமகண் மாமுக மாஞ்சென்னை வாழும் புலவரிஸைப்
பாமக ளுமறை யுட்பொருள் பன்னும் படியுதித்த
சோமக ளும முனிசாமி நாயகன் கோகனக
மாமுக மாமத னைக்கண்டென் காதல் வழுத்தணங்கே.

நெரும்பூர்,

## மேகாவாசாரி அவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

பொன்னார மாமணி முத்தாரஞ் சந்தம் பொதுளுமுலை
மின்னே ரிடைதண் மதிதிரு மாமுக வேல்விழியீர்
பன்னோர் நெரும்பூரின் மேகாவாசாரி பரிவுடனென்
முன்னே வரச்சொல்லு வீர்காத லேய்ந்த விதஞ்சொலியே.

இராயபுரத்திலிருக்கும்,

## பு. தி. வீரராகவப்பிள்ளை அவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

சீர்கொண்ட தேவகி தேவி யசோதையர் செய்யறத்தின்
நீர்கொண் டுதித்த திருமாலைப் போற்று நெறிமறவா
நார்கொ டிருவேங் கடம்பிள்ளை சேய்வீர ராகவற்குச்
சார்கொண்டன் மேனி குயிலினங் காள்புகழ் சாற்றுமினே.

புதுவைமாநகரம்,

## அவக்கா

## வெண்மணி, ஐ. தம்பிப்பிள்ளை அவர்கள் மீது.

# இசைக்கவி ரத்திநாகரம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

திருத்தகுதென் புதுவைவே ளாளகுல திலகனருஞ் சிறப்பு வாய்ந்த, பொருத்தமுறு வவக்காவெண் மணித்தம்பிப் பிள்ளையினைப் புகழ்ந்திங்கோதுங், கருத்தமிழி ரத்திநா கரமென்னும் பனுவலுக்குக் கருணைசெய்யும், ஒருத்தனவன் சத்தியமறை யருத்தனவன் றிருவடியை யுளத்திற் சேர்ப்பாம்.

இருபத்தெண்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஜலநிதி யிடைச்சேஷ வமளிமிசை யறிதுயில்செய் சலசலோசனனடியிணைத், தாங்கிருத யாசனன் ப்ரெசிடென்சி காலேஜின் தமிழ்ப்புலமை யினைநடாத்துஞ், சகஸ்த்ரக்ரண ஞானபாஸ் கரராஜ கோபால சற்குருபா தாம்புயத்தைச், சந்ததம் பணியுமாணாக்கனைந் தியலிலக் கியவிலக் கணப்புணரியைப்,

புலனுற மடுத்தேப்ப மிடுகவிச் சலதரம் புனிதகோவைசியகுலப், பூமன்கிருஷ் ணப்பமால் தன்குமாரன்வளம் பொங்குபணை சூழ்வேலூரன், புகழ்பெருகும் ஆங்கிலோ பாஷாந்திரன் றேட்டை பொரும்ஆர்ய முணர்விதரணன், புறங்கூறு நரைவெல்லும் நாராயணஸ்வாமி பிள்ளை விடுகின்றகவிதை,

கலவையிள தனவரம் பையருலவு மாளிகை கதித்தோங்கு புதுவையூரன், கனப்ரான்சு தேசபா ஷாப்தியின் முகட்டெழுங் கதிரொன விளங்குமாரன், காராளகுலமோங்க வந்தவதரித்த கொடைகாம்பிரமிகுமுதாரன், கலையருமை யறிஅவக் காவெண் மணித்தம்பி காவலனெதிர்ந்து காண்க,

சிலநாண்முனம்மியா னின்னுடைந்துநீர் செய்தவுபசரணையினையித், தேசவித்வான்கள்கேட் டகமகிழ்ந்துளார்வருந் திங்கள்பங்குனியினின்பாற், றிவ்யப்ரபந்தம தியற்றியச் சிட்டாங்குத்தேடிவர விஷ்டமுளனல், சித்தமிது போலநின்சித்தமுண் டென்றே திருப்தியெண முற்றனனரோ.

## பஞ்சரத்நப் புகழ்ப்பாமாலை.

நேரிசை வெண்பா.

வேலை வளப்புதுவை வெண்மணித்தம் பிப்பிள்ளை
பால்பஞ்ச ரத்நப் புகழ்ப்பாவா - மாலையினைச்
சொல்லத் தயைசெய்வாய் சொல்லற்கரியசெயல்
எல்லாம் வலகடவு ளே.

பதினுன்குசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

நீர்கொண்டமுகிறவழும்வெல்லைமலை ஆயர்கணெருங்கிப்பணிந்தபாதம், நிமலிகனி மரியன்னை மடியினும் புல்லணையினிடமும் படிந்தபாதம், சீர்கொண்ட சூசைமுனி மருமத்தி னிடைபயில் சிறந்தசெஞ் சலசபாதம், தெரிககன வுடுகுறி யறிந்துமுச்சோதிடர்கள் சேவித்திறைஞ்சுபாதம், பேர்கொண்ட பெத்திலக மெருசலமதாதிநடை பேறுபெறநாடுபாதம், பிணையிருப் பாணிகாயப் பாத மெங்குநிறை பிதாவலக் கைகொள்பாதம், வார்கொண்ட ஆதிதேவன்றிருச் சுதன்பாத மணமணக்கிதயகமலா! மன்புதுவை யம்பதியின் மின்னுவேளாளவெண் மணிதம்பிப் பிள்ளைமாலே.

ஆதிவேதம்மோக்ஷ மருளும்வேதம் பிதா வரியவாக்கான வேதம், அமலமணி வேதமோ சேயினுக்களவொடீ ளைந்தாயிலங்குவேதஞ், சோதிவேதந்தீர்க்க தரிசிகளெலாஞ்சொலித் தூண்டுவேதஞ் சேசுவாஞ், சுதனுரைத்திடுவேத முலகத்துயிர்க்கெலாஞ் சொந்தமாய்வந்தவேதம், நீதிவேதந்தவிது கீதவேதம்ப்ரபலம் நீடும் அப்போஸ்தலர்க்கு, நெஞ்சத்துறும்வேத மவ்வேதவாராய்ச்சி நிதமுமகலா விதரண! வாதிமூவேழ்மர்செங் கோன்மைக் குரித்தான வாய்மைகுணமார்ந்த விபவா! மன்புதுவையம்பதியின் மின்னுவேளாளவெண் மணிதம்பிப் பிள்ளைமாலே.

உள்ளாவலுறு மக்கள் பக்ஷத்தினும் பெரிய ரோதிடுமில் வாழ்க்கைதனினும், ஊதியச்செய்லினுங் கணிதநுட்பத்தினு மூரவர்கண் மீதன்பினுங், கொள்ளுமுறைதனிலுநற் கல்விவிடயத்தினுங் கூர்ந்தியோ சிப்பதினினுங், கோத்திரப் புகழினுந் தந்தைதாய் நெஞ்சினுங் குருமார்கள் திருவாக்கினுந், தெள்ளியகுணத்தினும்பழமொழிவிருப்பினுஞ் செந்தமிழ்ச் செய்யுள்களினுந், தீர்க்கவூக்கத்துனே ரோனமறுஜன்ம தேகங்கொள் வோருமுண்டோ? வள்ளன்மூவேழ்மர்செங் கோன்மைக் குரித்தானவாய்மைகுண மார்ந்தவிபவா! மன்புதுவை யம்பதியின் மின்னுவேளாளவெண் மணிதம்பிப் பிள்ளைமாலே.

சொன்னயத்தானு முயர் நன்னயத்தானுமிகு சூழ்ச்சியுறு புத்தியானுந், தொழினடையினுனுமவ் வழியுணர்வி னுனுமுக தோற்றமறி யறிவினுனும், பன்னுநலொழுங்கானு மவரவர் தராதரம் பார்த்துச்செய் நன்றியானும், பக்ஷம்வைத்திடினவர்க் காகினுங் குறையொன்று பண்ணிடா, நட்பினுனும், உன்னதத்தொடுகால மாலைசபதபநியம மோம்புங் கருத்தினுனு,முள்ளங்கலங் கொணுத் தயிரியத்தானுமிவ் வுலகிலுனையன்றி யறியேன், மன்னர்மூவேழ்மர்செங் கோன்மைக் குரித்தான வாய்மைகுண மார்ந்தவிபவா! மன்புதுவை யம்பதியின் மின்னுவேளாளவெண் மணி தம்பிப் பிள்ளைமாலே.

கற்றபெரியோர்புலமை யோரேவர்கள்வருகினுங் கனிவாயுவந்து முன்னுள், காசினியி லீந்திடுங்கொடையாளர்தம்மினுங் கைமிகநிரம்ப வள்ளிப், பொற்பூடணங்களொடு நிதிமணியெலா மவர்கள் போதுமென் ருேதுமட்டும், போற்றிக் கொடுப்பதினு மெளியோரர் வரக்கண்ட போதுதவி புரிவததினுந், தளர்வின்றி பொன்றைக் கொடுப்பதினு நின்னைநிகர் தாதாக்களைக் காண்கிலேன், மற்கொடைமூ வேழ்மர்செங் கோன்மைக் குரித்தான வாய்மைகுண மார்ந்தவிபவா! மன்புதுவை யம்பதியின் மின்னு வேளாளவெண் மணி தம்பிப் பிள்ளைமாலே.

---

## நவமணிமாலை.

### நேரிசைவெண்பா.

கன்னன் புதுவைஅவக் காவெண் மணித்தம்பி
என்னுமிளங்கோவுக் கினிதிசைத்துச் – சொன்னவம
ணித்தொடைய லுக்கருள்செய் நேமிக்கடவுளைச்சித்
தத்திற் றுதிசந் ததம்.

---

### கட்டளைக்கலித்துறை.

சீர்கொள் திரித்துவ மார்தனித் தெய்வத் திருமறையைத்
தேர்கொள்திருச்சவைக்றீஸ்துவர்தம்மிற்றிருக்கனையோய்
வார்கொள் புதுவைச்சிவி லவக்காவெண் மணித்தம்பிநின்
பேர்கொள் செயுட்கள்வழிப் பெற்றதுதமிழ்ப்பேற்றினையே.

நிதம்பிரியான் கணரூம்பிரியாுன் மெய்ந்நெறிச்சரத
மதம்புதையத்ரணமும் மதியாரை மயிர்ப்பிளக்கும்
பதம்புரியான் புதுவைப் பதிப்ரெஞ்சு நற்பாஷைவெண்ம
ணிதம்பிபிள்ளைப் பெயருற்ற பகிரதிநீள்குலனே.

அணிதந்து வந்தெரி பேராசிரிய ரகத்தினுக்கும்
பணிதந் தரப்பகர் பாவலருள்ளப் பதிவினுக்குங்
கணிதம்பொருந்துகணக்காயர் சித்தத்துங்காட்சியன்வெண்
மணிதம்பிப்பிள்ளைப் புதுவைவேளாளர் வரோதயனே.

எந்தெந்த நாளினுங் கல்வியுங் கேள்வியு மின்புமிருந்-
தந்தந் தருவெண் மணித்தம்பிப் பிள்ளையெம் மண்ணலின்பால்
சிந்தந்தம் பாடி யரங்கேற்று வாணர் செழித்திடச்சீர்
தந்துங் குணந்தரு வான்றடை யின்றித் தனந்தினமே.

பண்மணி வாய்க்கவிப் பூவல ரோயருட் பாற்புதுவை, வெண்மணி தம்பிப்பிள் ளைக்குண்டெஞ் ஞான்றும் விருப்பினின், கண்மணிச் சொற்பொருள் காமத்துப் பாலைக் கடைக்குவிற்றங், கெண்மணி யாம்பொருட் பால்கொண்டிப் பாலினுக் கேகுவையே.

பொல்லாக் கயவ ருழைப்பொருள் வீணர்க்கும் பூரியர்க்கு
மல்லாடு வம்பர்க்கு மாகியும் பாவம் வளர்த்திடுமால்
சல்லாப வெண்மணித் தம்பி நன் னுமத் தருமன்பொருள்
நல்லார்க்கு நாவலர் தங்கட்கு மாகி நயந்தருமே.

தாயான வள்மக வுக்குச்செய் நன்றி தனக்கதிகம்
ஞாயா திபர்தலங் காண்புது வைக்கண்ய லாயனொனுங்
தூயோ யெழில்வெண் மணித்தம்பி யேவித்துவஜனர்தம் [யே:
வாயா விசைக்கக்கை யாற்பொன்னள் ளித்தரும் வண்கொடை

* கொண்மணி தம்பிர சமானனினின்னைக் கூடினர்க்குத்
திண்மணி தம்பி சகாதரு ணியன்பு செய்திகண்டாய்
வண்மணி தம்பிதத் தார்மகிழ் சீர்ப்புது வைம்மணியாம்
வெண்மணிதம்பி சிகாமணி கண்மணி வேண்மணியே.

முத்தினத் தாணியும் புட்ப வினத்தின் முளரியும்பல்
வித்தையின் ஞானநல் வித்தையும் போலும்வே ளாண்மரபில்
உத்தமன் வெண்மணித் தம்பியென்றேயுல கஞ்சொலவெள்-
ளற்றமி ழுங்கமழ் கின்றது நின்புகழ் நற்கந்தமே.

---

* கொண்ம் - கொள்ளும்.
அண் - பொருந்திய.
இதம் - நெஞ்சம்.
திண் - வலிய.
மண் - பூமி.
இதம் - சொல்.
வண் - வளமையாகிய.
மணி - ஓசையை.

முன்முடுகு, நேரிசை வெண்பா.

கந்தமுந்த ரும்பெழுங்க ளுண்கவண்டி னஞ்செறிந்த
நுந்தழைந்தி டும்மலங்க னுண்மருங்க - ரந்தருங்க
ணின்கணத்தை நேர்வெண் மணித்தம்பி மாலே! பாட்
டின்கணத்தை நேர்நின் னிதி.

பின்முடுகு, நேரிசை வெண்பா.

பண்மணிமா லைப்புயத்துப் பாடார் புதுவைநகர் [முத்
வெண்மணித்தம் பிப்பேர்கொள் வேளாளா!-வொண்மணி
திற்றவளத் தைச்சினத்துச் செப்பமுதத் திற்றெளித்துத்
துற்றருமச் சித்தமிகத் துள்.

நேரிசை வெண்பா.

வள்ளலவக் காவெண் மணித்தம்பி வேளாள
னுள்ளத் திளகி யுளாயொழுங்கால் - மெள்ளமெளப்
பூரியரும் பூவுலகிற் போந்தகல்வி மீதூறிச்
சீரியரா ளுரோ சிறந்து.

சீரார் புதுவைத் தினகரனே! சேசுபதந்
தாரார் மலர்சூட்டுந் தன்மையனே!—காராருங்
கையானே! வெண்மணித்தம் பிக்கனவானே! கருணை
செய்வானே! யென்பேன் செறிந்து.

விஞ்சியசீர் மேய வியன்கங்கை மாகுலத்தி
லுய்ஞ்சிடயா ருந்தோன் றுதாரகுண—மைஞ்சபுது
வாபுரியின் வெண்மணித்தம் பிப்பெயரின் வள்ளலிங்ங
னீபுரிதி நன்னலநி னைந்து.

குறள் வெண்பா.

வெண்மணித்தம் பிப்பிள்ளை மேதகையா! நங்களிரு
கண்மணிபோல் வான்சீர் கழறு.

## நடுவெழுத்தலங்காரம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சுத்தாகா யம்பழனம் வனசீஞ் சூளை
சோறுவேய் விளக்குகச கசப்பா றத்தை
ஒத்தசெழி விவைபத்துப் பதமொவ் வொன்று
முறின்மூவக் கரநாப்ப ணேங்கெழுத்தால்

வைத்தவபி தானவள்ள னின்னைப் பாட
வல்லனல்லே னுயினுநின் மாட்டெற் குள்ள
சித்தஞ்செய் வித்ததுகாண் பிரியா வன்பு
செய்குவாய் சுவணபுட்பம் பெய்கு வாயே.

| | | |
|---|---|---|
| தூவெளி | சாதம் | கிள்ளை |
| பண்ணை | காம்பு | விளைவு |
| தாமரை | தீபிமை | |
| கணிகை | அபின் | |

வஞ்சித்துறை.

அன்பமா யரணிதி, பொன்பயில் புதுவை
வெண்மணித் தம்பிமால், மன்புகழ்க் கரமே.

கட்டளைக் கலிப்பா.

வெளைப்பணிமணி யாதியெண் பெண்ணினம்
மேதினியி லிழைத்திட வேண்டுமேற்
றுளைப்படுத்துங் கருவி வை ரம்மணிச்
சூட்டும்பேர்வெண் மணித்தம்பி பிள்ளைநின்
றுளிப்பறிந்துதேம் பாவணி நூற்றிற
மோங்கும்வேள்சவ ராயலிசைக்கவிக்
களிப்பறிந்துரைத் தேனிதை யானுநின்
கருணைகூர்ந்து கருதக்கடவதே.

இதுவுமது,

வழங்கிடும்பிழை நோக்கி வாதிக்கவும்
மையொருங்கற வசனித்தெழுதவும்
பழங்கனிந்தது போற்பொஞ்சுபாஷையிற்
பாடவும்விதி நூலெளிதிற்பட
தழுங்குகின்றவர் யாரும் புதுவையி
லண்ணல் வெண்மணித் தம்பிப்பிள்ளைக்கிளர்
ஒழுங்குகண்டுக ளிப்பது போலிந்நூல்
ஒழுங்கு கண்டுளத் திற்களிப் பார்களே.

விருத்தக் கலித்துறை.

வானுர் மணிமா டஞ்செறி வளமார் தருபுதுவைத்
தீானு பதிகங் காகுல தரணீ பதிமரியின்
ஞானு பநிகழ ஞடிய நவில்வெண் மணித்தம்பி!
யானே வதுதெரி யுந்தயை யிலனென் பதுமெவனே.

அஞ்சங் கண்டுயி லும்பணை சூழு மகன்புதுவை
விஞ்சிய சீர்கெழு கங்கை குலத்தில் விளங்கிமெய்யே
தஞ்சொ லிரைந்தென வந்திடு கற்பனை தாம்வழுவா
இஞ்சி குயிற்றிடு வெண்மணிதம்பி! யெனக்கருளே.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மெய்யன்பி னிலையைவிழையும் பெருந்தகைமை யாலிங்ஙன் மேதக் கோரும், அய்யன்பி னிலையின்சேமென், றுரைக்கும்வெண் மணித்தம்பி யறத்தின் றேன்றல்!, பெய்யன்பி னுனைவிழையும் பல்லோரி னல்லேன்யான் விழுமி தன்றும், பொய்யன்பின் விழையுஞ்சில் லோர்போல்வே னெனினுமுனைப் புகல்புக் கேனே.

கட்டளைக் கலித்துறை.

விதுமலி மாடம் பொலிபுது வைப்பதி மேவியநன்
னதிகுல நாத னெனும்வெண் மணித்தம்பி நாட்டிற் கண்டோம்
கதியென் றடைந்தவர்க் கில்லையென் னுதருள் கைத்தலமும்
சதியெண் கிலாமன மூந்தவன் தானந் தழைத்திடவே.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

கனந்திகழும் புதுவைநகர் வாழிசத்திய மறைவாழி கருதந் நூலின், மனந்திகழுங் குருக்களுட னரசரும்வை சியமரபும் வாழிநாளுந், தனந்திகழும் அவக்காவெண் மணித்தம்பி மாலொடுன் னுன் றமரும்வாழி, தினந்திகழு மிசைக்கவிரத் தினாகரமும் வாழியவிச் செகத்தின் மாதோ.

---

இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகளாதீனத்திற்குரிய
பிறைசை, அருணசலசுவாமிகள் பிரதமமாணுக்கர்
குணம்பேட்டுக்கடுத்த ஈசூர் - கணக்கு,
**சச்சிதானந்தபிள்ளையவர்களாற்செய்யப்பட்ட**
பிரபுலிங்கலீலைவிருத்தியுரைக்கு.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பூமேவும் பொழிற்றுறைமங் கலவீர சைவவெழிற்
பூமா னுகித்
தூமேவு மந்நெறிசெல் சிவப்பிரகா சப்பெயர்கொள்
தூயோன் சொற்ற
நாமேவும் பிரபுலிங்க லீலையெனு நூற்குரையை
நன்கு ரைத்தான்
ஈாமேவு மீசூர்சச் சிதானந்த னெனுமதுர
கவிஞ ரேறே.

ந-சு வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

நேரிசை வெண்பா.

இலிங்கமே தானென் றிலங்கற் குபிர
புலிங்கலீ லைப்பெருநூற் பொங்கி—யொலித்தலினைக்
கண்டுரைசெய் தான்சச்சி தானந்தன் காண்போர்கற்
கண்டெனவே கொள்வார் களித்து.

மரபுலிங்கந் தானாய் வ்யங்குதிரு ஞான
பிரபுலிங்க லீலையெனும் பேர்நூற்—கரியதிறத்
தின்னுரைசெய் தான்புலவ ரோத்துசச்சி தானந்தன்
தன்னுரைநே ருண்டோ? தகை.

## ச. வேங்கடராமாநுசதாசர்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மருக்கமல மகளுறையுந் துழாயடவி மருமமுறு
மாலே வையத்
தொருமுதலோ னெனவலனென் றேனுடன்வா தித்தபெரு
வுரவுத் தொண்டன்
பிரகலா தனவாழ்வான் புகழாந்த்ர கீர்த்தனமாப்
பேசி னன்றேன்
றருபொழில்சூழ் சந்த்ரகிரி வேங்கடரா மாநுசதா
சண்ணன் மாதோ.

## விவாக மகோற்சவத் திருமுகம்.

இருபத்தெண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட ப்ரபவாதி யுவவருடம் வைகாசி திங்களிரு பத்து வாருந், திகதிதிங் கட்கிழமை வளர்பிறை சதுர்த்தசித் திதி பூச் நக்ஷத்திரம், செங்க்ரண கரச்சூரி யோதயம் ஆறுமணி தியானத்தில் யாதவ குலத், தீபன்வே லூரன் கிருஷ்ணபிள்ளை கனிஷ்ட சேயன்முத் தமிழ்த் தினகரன்,

பேர்கொண்ட மதனவேள் நாராய ணச்சுவாமி பிள்ளையவர் கட்கும் நெசல்வாழ், பெற்றிமிகு கனதைதிகழ் நீரன்வீ ராசாமி பிள்ளைநற் றவம்தில் வரும், பெண்ணினல் லாளிரதி யனையகுப் பம்மாட்கும் பெட்புறுஞ் சுபமு குர்த்தம், பெருகுமக் கடிகை தனின் மாத்தூரன் முனிசாமி பிள்ளையரு மைப் புத்திரன்.

ஏர்கொண்ட ராமசாமிப்பிள்ளை யவருக்கும் இசைநாராயண சாமி மால், என்னுமண் மகனது சகோதரன் கலைவலோர்க் கிடு குறு கரவி கஜிதன், இனியவர தப்பிள்ளை யருள்சேயி காமாக்ஷி எனுமிளங் கொடிமி னுக்கும், இந்த்ராதி தேவரறி யத்திரு முகூர்த்தம்நிறை வேறுமித னைக்குறித்து,

வார்கொண்ட ராஜமா னியராஜ பூஜித மகாராஜ ராஜஸ்த்ரிதே, வரிர்தாங்கள் சென்னைராயபுரம் அர்த்தூன்வீதி மன்னு முதல் நம்பர் வீட்டில், வந்துமண வாளர்மண வாளிகளை ஆசீர் வதித்தேகு வீர்க ளெனநும், வருகைக்கு வழியினின் றெதிர்நோக்கிப் பலதரமும் வந்தனிக் கின்றேமரோ.

---

சென்னை பிளாக்டவுண் ஐஸ்கூல் தமிழ்த் தலைமைப்புலவர்

## அ. ச. ஜெகராவ்முதலியாரவர்களெழுதிய

### தேம்பாவணி வசனகாவியத்திற்கு.

---

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அணிகொண்ட வாரியஞ் செந்தமிழ் பிராஞ்சுகலை ஆங்லோ லித் தாலி லத்தின், அருங்கடற் பொருண்முகந் தன்பராம் பைங்கூழ் அகங்கனிய பொழியு மேகம், பணிகொண்ட சத்யமறை யிந்நாட் டவர்க்கெலாம் பரப்புமா ரியவி தரணன், படரம் புலிச்சரணி கற்பரசி காவலூர்ப் பைங்கொடியாந் தேவ தாயின், திணிகொண்ட மெய்யடியன் வீரமா முனியெனச் சிறந்தவபி தானனன்கு-செப்புதேம் பாவணியி னுளைவிளங் காதுபலர் சிந்தைசே வேறல் தேர்ந்து, மணிகொண்ட தண்டமிழ்ச் செகராவு நாவலன் வசனகா வியமாக்கி யிம், மாநிலத் தோருய்ய வச்சுக் குயிற்றீந்த வண்மைசொல வசமாமரோ.

நேரிசை வெண்பா.

அட்டதிசைக் கீர்த்தியுறை அட்டாவ தானியென<br>
மட்டில்புகழ் வாய்ந்ததமிழ் வண்புலவ!—இட்டமுடன்<br>
தேம்பா வணிவசனத் தேறலைநீ யூட்டுகையில்<br>
ஓம்பாதுண் ணுருமுண்டோ? ஓது.

---

௧அ வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

ஆலங்குளம், பெ. இராமநாடார் புத்திரர்

## வேலாயுதநாடார் அவர்கள்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வானில வுறைய விம்மு மலத்தனச் சசிமு கந்தண்
டேனில வெறிக்கு முத்தச் சேடிசே டாலத் தூரன்
ருனிய வமுதீந் துய்யுந் தனபதி பாண்டி யூரன்
தானினம் புரக்கும் வேலா யுதமுகில் மன்னி வாழி.

---

இராயபுரம், காசிமேடு வீராசாமிநாயகர் புத்திரர்

## சுப்புராயநாயகரவர்கள்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

நீர்மரு கொண்டற் கொண்டை நிறைமதி வதனி வாடாப்
பேர்மரு மல்லித் தாரிற் பெருத்திடும் புயன்மெய்ஞ் ஞானச்
சீர்மரு சம்பு கோத்ரத் திலகனெம் வீரா சாமி
நார்மரு சேய்சுப் ராய நாயகன் நீடி வாழி.

---

மோசூருக்கடுத்த அக்ராவரம் மணியம்,

## பெ. சேஷப்பிள்ளையவர்கள்மீது.

நேரிசை வெண்பா.

சொற்பெரிய மாராசன் சூழ்பெரிய தம்பிதவ
நற்பயன்சே ஷப்பிள்ளை நன்னளனைப்—பற்பலநாள்
சந்திக்கத் தித்திக்குந் தானேற் பவருளமு
மெந்தற்கெம் போல்வார்க் கெவன்.

---

## விவாக மகோற்சவத் திருமுகம்.

பதினன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பூமாதி னருள்கொண்ட வியவருட மாசிநான் காந்தெய்தி
பொலி திங்களிற், புகழ்சத்த மித்திதி சுவாதிநட் சேத்திரம் பொ
ங்குதய மொன்ப ததனிற், றேமேவு மேஷலக் கினமருவு சுப

வோரை தன்னில்சிந் தாத்ரி பேட்டைச், செல்வனுல கப்பமேஸ்திரிவீதி கதவிலக் கம்பத்த தாங் கிரகசெம், மாமா லெனும்பூரித்த சாரதிப் பிள்ளைசேய் மாணிக்கம் பிள்ளை வேட்டும், மாவலன்வீ ராசாமி பிள்ளைபுத் திரிபாக்ய வதியம்மா ளுக்குந் திரு, மாமாதி னருளினன் மாங்கலோற் சவதிருவி ழாமகிழ்வ தாய் நடக்க, வந்தருள்வீ ருந்தமது பந்துடனு மாசீர் வதித்தருள்வீர் வந்தனமதே.

## இராயபுரம், பலகைதொட்டிவியாபாரி
## பெ. சிவராமநாயகர் அவர்கள்மீது.

நேரிசை வெண்பா.

பாரளந்த பாதம் பணிபெருமா ளுய்க்கன்றன்
சீரளந்த புத்ரசிவ ராம்நாய்க்கன்—நீருளிஞேர்
நெஞ்சங் களிக்கும் நினைநினைவுக் கின்பமெழுஞ்
செஞ்சொ லொழுக்கந் தினம்.

## மதுரகவி. கன்னியப்பபிள்ளை இயற்றிய
## சிலேடைவெண்பாமாலைக்கு.

நிலைமண்டில ஆசிரியப்பா.

சீர்தரு மாமறை தேடுந் திருவளர்
கார்மலி செங்கண் மால்பொற் கமலத்
துதித்தீ ரேழுல குயிர்பல பலவுங்
கதிக்கும் விஞ்சைக் கணிதங் கலையுயர்
வேதன் சிருட்டி வித்தக ரவருண்
மாதவத் தோனென வாழ்த்துங் காந்த
மாரிஷி கோத்திரம் வருமொரு பாண்டியன்
நீரருட் கங்கைக் குலநிதி சான்றேன்
சிவபிரான் செம்பொ னடிபொடிப் பூழ்தி
யெவரணி யினுமவ் விறைவனென் றிறைஞ்சும்
ஏனுதி நாயனு ரின்மர புதித்தோன்
மானு பரணன் மலர்முகத் தருமன்
வேங்கடே சக்கிரா மணிதவம் விளங்கப்
பாங்குயர் கொண்டல் கரன்பகர் குபேரன்
பரிதியின் சேயங் கத்தர சென்ன
வருள்பூஞ் சோலை கிராமனி யரும்புகழ்

நிலமிசை நிலவச் செந்தமி ழாய்ந்து
பொலன்பொலி சிலேடை வெண்பா மாலை
நலம்பெற நற்கொடை நச்சினி தியற்றி
புலப்பி லெழுத்தா லுவந்தச் சியற்றினன்
பூங்குயில் பிரசப் பொழிற்றண் பணைசூழ்
காஞ்சி புரத்தோன் கரிய மாலடிக்
குதிக்குந் துங்கன் றூய காசிபர்
மதிக்குங் கோத்திரம் வருங்கலை வல்லோன்
அருணீ டரச ரகமகிழ் கொள்ளுங்
கருணீ கரின்குலக் கதிரவ னென்னப்
பகருஞ் சகநா தம்பிள்ளைப் பன்னு
ளிகமீ தியற்றுந் தவமுருக் கொண்டு
வரும்புக ழேந்தி மாமது ரக்கவி
யிரும்புகழ்க் கன்னி யப்ப பிள்ளையே.

---

வேலூர் கிருஷ்ணசாமிபிள்ளையவர்கள் மருமகளும்

ஓதியம்பட்டு, கேசவபிள்ளை புத்திரியுமாகிய

சௌபாக்கியவதி,

## அலர்மேலம்மாள் பரமபதமடைந்தபோதுசொல்லிய.

---

### நேரிசை வெண்பா.

மலர்மேலம் மாள்கமல மாணடியைத் தேடி
அலர்மேலம் மாணீசென் றுயென்—றலையா
திருக்கினுமென் கண்க ளிராவுறங்கு தில்லை
உருக்கொடுவென் கண்முன் னுலா.

கருவைகுந் தம்பிறவி கட்டறுப்போர்க் கெய்துந்
திருவைகுந் தம்புகுந்த தேனே!—உருவம்
பிரிந்தா யலர்மேலென் பேர்பிரியா தென்றும்
விருந்தாதி யோர்மனத்தை விட்டு.

புருவச் சிலையும் பொருவிழியொண் வாளும்
திருநாசி யாங்கதையுஞ் சேரும்—ஒருசக்
கரமுகமுஞ் சங்கக் கழுத்துமலர் மேனின்
சிரமுகத்திற் கண்டுபிரிந் தேன்.

மன்னும் அலர்மேலம் மாணற்பேர் வாணுதலே!
நின்னை மறந்தாலு நின்னடத்தைத்—தன்னை
மறவேனை நீயு மறவா நெறிக்கிங்
குறவாகிக் காட்டா யுரு.

விருந்தோம்பும் பொன்னே! விளங்குபுவி மின்னே!
யிருந்தோம் புவிவாழ்ந் திருந்தோம்—பிரிந்திருக்கக்
காலம்வந்து மென்னுட் கரந்திருப்ப தென்னை? அலர்
மேலெனுநற் பேதாய்? விளம்பு.

---

ம. முனிசாமிபிள்ளையவர்கள் புத்திரியாகிய

## குழந்தையம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

---

பதினான்குசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

திருவோங்கு தாமரை மலர்த்தடஞ் சூழ்குருகை திகழவரு காரிமாறன், திருவவ தரித்தகலி யாப்தநா லாயிரஞ் செறியுந் தொ ளாயிரத்துக், குருவோங்கு நாலொழியு மெண்பானி லீஸ்வரக் கிளராண்டி லக்கோமகன், குவலயம் வருமதியின் மதியம் வா னவர்பெறக் குறைவில்கலை நுகருவிக்கும், மருவோங்கு பக்கத்தி னட்டமி புரட்டாதி மணிநான்மூ வெட்டுதேதி, மருவிய பகற்கால மிசையரவி னுடியவெம் மான்றனி வளர்ந்தபொதுவர், உருவோங்கு மரபினி லிராயபுர முனிசாமி யென்னுங் குபேர னின்ற, உத்தமி குழந்தையா விற்றுயில் குழந்தையை யுகந்து சென் றெய்தினளரோ.

விருத்தக் கலித்துறை.

தவம்புரி வோரு மடைந்தறி யாவத் தானத்தில்
அவம்புரி நெஞ்சறி யாத குழந்தை யடைந்தாளென்
நவம்புகல் கின்றது நந்தா மன்று னுமினிநம்
உவந்தெறு வானரு ளென்றிட லுசிதப் பண்பாமால்.

கட்டளைக் கலித்துறை.

குழந்தையி லாவில்ல மென்னில்ல மென்னக் குறித்துலகம்
அழுந்துப ரோடு புகலுமவ் வாறிவ் வவனிமிசைக்
குழந்தை யெனும்பெயர் கொண்டிடு நீயெங் குடிசைவிட்டுத்
தொழுந்தெய்வ தப்பதிக் கெய்தினை யென்னெஞ்சஞ் சோர்ந்திடவே.

எம்மாத் திரம்புத்தி சொன்னாலும் பாழ்த்த வெனதுமனஞ்
சும்மா விராமற் பலபோதுஞ் செய்யுந் துயர்க்கடலை
அம்மா கடந்தேற வோர்தெப்ப முண்டோ? வயனெழுத்தால்
அம்மா நிலங்கொண்ட அம்மா குழந்தை யணியரசே.

நேரிசை வெண்பா.

பாயிர மாமறையும் பைந்தமிழி னுலா
மாயிர மாமீறையு மாராய்ந்தோர்—பேராயடைய
மம்பரமபதத்தை யன்பிற் குழந்தை
யிற்பரிவோம் பாலுற்ற ளேய்ந்து.

---

இராயபுரம்,

மாத்தூர் வேங்கடாசலபிள்ளையவர்கள் மனைவியார்

## தெய்வயானை அம்மாள் அவர்கள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

இருபத்தெண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

ஏர்கொண்ட கலியாண்டு நாலா யிரத்துத் தொளாயிரத் தெண்பத்துமூன், றியல்சாலி வாகன சகாத்தமோ ராயிரத் தெண்ணூற்று நான்கினிகழும், இசைகொண்ட பிரபவாதி மூவைந்தி லேய்ந்தவிஷு வெனுமாண்டி லைப்பசிமதி, யிருபத்து நாற்றேதி யிற்சோம வாரமே யிலகபர பக்கதுதியை.

பேர்கொண்ட ரோகிணி கௌலவா கரணம் பிறங்கிடு மேஷலக்னம், பேசுமிச் சுபதினத் தென்றுமேற் கடல்செலப் பிறழுமிரு நாழிகையின்முன், பெட்பின்மதி மதிள்கடக் கப்பெரு தம்பொன்மனை பீடுகெழு சாளரத்துப், பேதையர் குழாங்கள்கண் ணுடியென நிலவிடப் பிரபலவண் மாத்தூரினுன்.

கார்கொண்ட மேனியா னவதரித் திடவே கவின்கொள்யாதவகுலத்துக், கற்பக நிழற்கணம ரிந்திரதிரு வன்வேங்க டாசலமகிபனில்லக், காதலியி மாசலன் றுன்குயிற் றியதவக் காதலியை நிகர்மடந்தை, கற்புக் கருந்ததி யெனத்தகுதெய் வானையாங் காரிகையில் லறவாழ்க்கையில்.

நீர்கொண்ட கடல்கொண்ட நிலன்வயிற் புண்ணுணிரம்பிடப் புகழ்கொண்டுநன், ஸ்ரீநியா சுந்தனது குலவிர்த்தி தனையே நிச

ந்திரி டன்குலத்தே, நிறைதவத் தால்வளர்ந் திடுகமல லோச
னனை நெஞ்சமுட் கொண்டுநிறுவி, நிலையிலா விவ்வுடலை நீத்தெ
ன்று மழியாத நீள்விசும் பெய்தினளரோ.

கட்டளைக் கலித்துறை.

பிணிகொண்ட மாயை மலமாதி நீக்கும் பிரானெனைமையே
பணிகொண்ட வேய்ங்குழ லூதிபொற் பாதத்தைப் பற்றினள்கா
தணிகொண்ட மால்கும ரப்பிள்ளை யின்றசௌ பாக்யவதி [ண்
கணிகொண் டிடுந்தெய்வ யானைநன் னுமத்துக் காரிகையே.

நேரிசை வெண்பா.

விஷுவாண்டே யொண்டுலா மேலட்ர பக்கத்
திடையே யிலங்குதுதி யேய்ந்து—மிடைநாளி
னங்கடெய்வ யானை நமரங்கள் சூழ்விசும்பை
யிங்ஙனின்றுஞ் சென்றடைந்தா ளின்று.

---

இ ரா ய பு ர ம்,

வேலூர், கிருஷ்ணசாமிபிள்ளையவர்கள் மருமகளும்,

நெசல், வீராசாமிபிள்ளையவர்கள் புத்திரியுமாகிய

## சௌபாக்கியவதி, குப்பம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

---

பதினன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சிருலவு பிரபவாதி பார்த்திப வருடத்திற் சேர்ந்தமா சித்தி
ங்களிற், றெய்தியிரு பத்தொடொன் பான்வியா ழக்கிழமை திதி
சஷ்டி, யறுமீன்கணங், தாருலவு மணிபத்திற் கோவைசிய துரை
கிருஷ்ண சாமிமா னின்மருகளுந், தகுநெசல்வீ ராசாமி வேள்
குமா ரத்தியுந் தகைராய புரவித்துவப், பேருலவு நாரா யணச்
சாமி யெனுமெனைப் பிரியாத மனையுமான, பேதைகுப் பம்மா
ளெனுங்குலக் கொடியே! பிறங்குமாண் குழவிபேற்றால், ஏரு
லவு நின்வயது இருபத்து மூன்றில்சுர ரேத்தரிய பரமபதவீ,
டேறிவாழ் கின்றனை யானுமுக் குழவியு மினத்தார்க ளுங்கதறவே.

௬௪ வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

நேரிசை வெண்பா.

பொற்கொடியே! நோக்கப் பொறியறிந்து போஷித்த
கற்புடையாய்! யுள்ளக் கனிவுடையாய்!—சொப்பனத்துஞ்
சஞ்சலங்கள் விட்டொழியோ? சார்ந்தனையோ? வைகுந்தம்
அஞ்சலெனச் சொற்றுவரிங் கார்.

ஆழ்வுபெறு பற்பல்வாழ் வாரா திகளடிக்கீழ்
வாழ்புபெறு குப்பம்மாள் மாமயிலே!—தாழ்வுபெரு
தென்பங்கி னிற்றுணையா யெஞ்ஞான்று நீயிருந்து
இன்பந் தருவா யிசைந்து.

பார்த்திவம் மாசி யிருபத்து வொன்பானிற்
சேர்த்தகுரு வாரம் திதிசஷ்டி—பூர்வமெனும்
பக்கங் கிருத்திகைசௌ பாக்யவதி குப்பம்மாள்
செக்கருல கேறுந் தினம்.

கட்டளைக் கலித்துறை.

சீர்கொண்ட யாதவ மால்கிருஷ் ணப்பிள்ளை செய்தவத்தின்
பேர்கொண் டுருப்பெற்ற நாரா யணச்சாமி பிள்ளையுள்ள
நீர்கொண்ட தேவிகுப் பம்மாள் வைகுந்த நிழல்பெற்றதால்
பார்கொண்ட வாழ்வு நிலையா தெனுமொழி பாலித்ததே.

---

கண்டாசிபுரம்,

நாராயணப்பிள்ளை

பரமபதமடைந்தபோதுசொல்லிய

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

செப்பரிய தமிழ் வருடம் ஸ்ரீமுகத்திற் றிகழ்தைமா தந்திகதி பன்னி ரண்டில், ஒப்பிலுத்தி ராடநட்சத் திரம ரக்கர்க் குபதேச குருவாரம் உதய மெட்டில், பெட்புறுகோ வைசியகுலத் திருவ நாதப் பிள்ளையருள் சுதன்நாரா யணமால் ஆழி, கைப்படுகண் ணன்பரம வைகுந் தத்தைக் காணற்கிவ் வுலகைவிட்டுக் கழன் றுன் மன்னே.

### நேரிசை வெண்பா.

சீரார் நாராயணவேள் சிற்றின்ப வாழ்வொழித்து
பேரார் பரமபதம் பெற்றனனே—ஏராரும்
ஆழ்வார்க ளோரீரு றம்பொற் பதத்தினிதம்
வாழ்வார்ந் திருப்பதற்கே மற்று.

### நேரசை கட்டளைக் கலித்துறை.

என்றைக் கிருப்பினு மோர்நாட் கிறப்பமென் றெண்ணியிளங்
கன்றைக் கருதி வருமாவின் வந்தருள் கண்ணுதலோன்
குன்றைக் கலந்தநா ராயண மால்வுண் குபேரனவன்
சென்றத்தி னலறி வாளர்க ணெஞ்சுந் திடுக்கிடுமே.

---

கூத்தவாக்கம், முத்துசாமிபிள்ளையவர்கள் மனைவியார்
சௌபாக்கியவதி,

## பொன்னம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

### பதினன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஏர்கொண்ட சாலிவா கனவருட மிருநூற்றி னென்றொழியி ரண்டாயிரம், இலகுதா துருவருட மீனரவி தேதிமதி னென்றி யற் சுக்லபட்சம், சீர்கொண்ட சப்தமியின் மிருகசீ ரிடநாற் செறிந்தவிர வினிலிரண்டாஞ், சேர்கடிகை யிற்பொன்வா ரச்சுப தினத்தினிற் றேவர்பெரு மான்முன்வளரும், பேர்கொண்ட குல திலக னஞ்செம்பொன் மாடம் பிறங்குறுங் கூத்தவாக்கம், பீடு பெற வருமுத்து சாமிதுரை யில்லக் கிழத்திநப் பின்னைநிகரும், தார்கொண்ட கீர்த்திவடி வேவடி வெனக்கொண்ட தையல் பொன் னம்மையிம்மை, தன்னிலில் லறநன் குறப்புரிந் தென்றுந் தவாதவீ டெய்தினளரோ.

### சந்தவிருத்தம்.

கஞ்சன் றண்மதி யஞ்சடி லன்கா ணுவஞ்சந்
துஞ்சு நெறிக்கண் விரைந்து செலீஇவெந் துயர்நீந்தாள்
மஞ்சு தவழ்ந்திடு மாடக் கூத்த வாக்கஞ்சேர்
எஞ்சலில் சீர்மலி நம்பொன் னம்மை யெனுந்திருவே.

---

சசு வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

சேத்துபட்டு, வீராசாமிபிள்ளையவர்கள் மனைவியார்

## சௌபாக்கியவதி, தாயம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட கலியாப்த நாலா யிரத்துத் தொளாயிரத் தெண்ப ததனிற், செறிபிரப வாதியீ ராறில்வெகு தானியவாந் திகழாண்டில் வைகாசியென்,பேர்கொண்ட மதிபதினெ ழாந்தெய்தி புதனாள் பிறங்குதிர யோதசித் திதி,பேசுமசு வனியிவையெ லாஞ்சேர் தருஞ்சுப தினத்தினிற் பாற்கரன்றன், னேர்கொண்ட வுதயத் தினிற்பினீ ரைந்துமணி யிற்செழுஞ் செஞ்சாலிபால், எழுகதிர் நிலாமுத் தினிற்கதி ரெனப்புகல விலகுசேத் துப்பட்டெனும், பார்கொண்ட புகழுலா மொருபதிவீ ராசாமி பகருநர பதி மனைவியாம், பாக்கியவதி பொதுவர் குல நிதியெனுந் தாய் பரம பதஞ்சதமெ னுற்ற னளரோ.

கட்டளைக் கலித்துறை.

வாராரும் பூண்முலை யாந்திரு மங்கை மணாளனெஞ்
சாரா ரமுதெனுந் தாய்வீரா சாமியை யண்ணலின்றிப்
பேரா வொளிமய மாந்திரு நாட்டினைச் சென்றுபெற்ற
நீரா ரறியத் தரமித் தரமா நிகழ்த்தரிதே.

நேரிசை வெண்பா.

தாரார் முல்லைமலர்த் தாமன்சேத் துப்பட்டு
வீராசா மிப்பேர் விறன்மீளி—சீரார்
மனையெவர்க்குந் தாயெனவே மன்னி யவண்மஞ்
சனையவர்க்குந் தாயானாள் சார்ந்து.

---

தீவான், செங்கல்வராயபிள்ளையவர்கள் குமாரர்

## விஜயராகவப்பிள்ளையவர்கள்

கைலாயபதவியடைந்தபோதுசொல்லிய

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அணிகொண்ட சாலிவா கனவருட நானூற்றி னைம்பதனிரட்டி ரட்டி, யாகுமீச் சுரவருட மதிகடக நாலெட்டி னுந்தெய்தி பூர்வ பக்கத், திணிகொண்ட சட்டிசித் திரைநா ளாயவிச் சுப

தினந் தேச மேத்துந், திறல்கெழூஉம் வேங்கடகி ரீந்திரன் றன ற்றிவான் செறிதொழில் குயிற்றி நிலவுங், கணிகொண்ட கருணி கனெ முனையினு மழுங்கிடாக் கவினெழுத் தாணிப்பதா, கைய னெழிற் செங்கல்வ ராயன்ற னொருசுதன் கலையுணர்வி சய ராக வன், மணிகொண்ட கண்டனடி மறவாத பத்திமையை வாய்ந்த வன தன்பார்த் தொழீஇ, மறலிவய மெய்தாம லவனைத் தெறூஉங் கமல மலர்டி யடைந்த னனரோ.

கட்டளைக் கலித்துறை.

கற்பகங் கண்டந்த வானத் தொளிக்குங் கொடைக்கரத்தின்
வற்பக மேய்விசய ராகவனையவ் வர்னத் துள்ளார்
அற்பி னெதிர்ந்துவந் தங்நாளப் பேரனை யாதரஞ்செய்
கிற்பது போலுப சாரஞ்செய் தாரொன் கிளத்துவமே.

நேரிசை வெண்பா.

அம்மா வியப்பாகு மாகண் டலத்தோரிப்
பொம்மாய மாமுலகைப் பொய்யென்றே—விம்மாநின்
றேறுதினரா லவ்வுரையோர்ந் தேவிசய ராகவனு
நீதியாய்ப் புக்கா னிலைத்து.

---

திருவளவாயல், சீயால கிராமணியாரவர்கள் மனைவியார்

## சௌபர்க்கியவதி, நயனம்மாள்

கைலாயபதவியடைந்தபோதுசொல்லிய

நேரிசை வெண்பா.

மாதுல னெல்லப்பன் மனமகிழ்ந் தீன்றெடுத்த
தாதை யெல்லப்பன் றகுகோட்டு—ராதிபனு
வாய்ந்தமையின் வாணயன மாதுநய னம்மையரன்
ஏய்ந்தவின்ப வீடெய்தி னாள்.

இருபத்தெண்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சீர்மருவு கலியாப்தம் நாலா யிரத்துமேற் றிகழுமொன் பா ஹூற்றெரு பிற், சேர்ந்தவெண் பத்திரண்டு விக்ரம வருடமதி கன் னிதேதி முப்பத்தொன்றுநற், சேமகுரு வாரநாள் பூர்வபக்கத்

துவாதசி திதிசெழுஞ் சதயமெய்ச், செயகண்ட யோகஞ் செறி ந்தெழில் குலாந்தினஞ் செஞ்சுடர்ப் பரிதி யந்தேர்.

நேர்மருவி யெய்துமதி ளார்ந்ததிரு வளவர்யி னெடுநகரி னானேனாதி, நெடுந்தவன் சூலனில்வரு மெல்லப்ப மால்புதல்வ னீடுகாந் தவமுனிவனா, நிகரில்கோத் திரனல்ல சற்பாத் திரன் புகழ் நிலாவுசீ யாலவள்ளல், நிறைநிறை மனத்தொடவ னயந நேர் நயனம்மை நீளருந் ததியிவரெனாப்.

பார்மருவி யேத்தநின் றாதுலர்க் கன்னம் பகர்ந்துதவி யம லனன்பர், பணிபணி யெனக்கொண்டு னாற்றித் தனாதுநண் பமை காத லன்சொல்வேதப், பருப்பொரு ளெனாவுளத் தமைமனத் தாள்பதுமை படிவெனப் பகர்கனத்தாள், பணிலமென நனிபரச வருகழுத் தாளரன் பதமலர லால்வழுத்தாள்.

கார்மருவ நடனமிடு மொருதோகை யாளருங் கருணைகொடு முந்தோகையாள், காஞ்சன மெனத்தகுந் திருமேனி யாணா ணோர் கவினுருக் கொண்டதென்னக், காசினியி னின்றுபல் லா ண்டுவாழ் வெய்தியிக் கரிசிலுட றன்னைநீத்துக், கங்கையஞ் சடி லனங் கணன்முக்க ணன்பெருங் கயிலைவரை நண்ணினளோ.

---

கோவைசியகுலதிலகராகிய,

## புதுவை, திருவேங்கடம்பிள்ளையவர்கள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

நேரிசை வெண்பா.

வியவாண் டிடபமதி மேவபர பக்க
நயமார் சதுர்த்தசிசேய் நாளாம்—புயலார்
மணிமாடப் பூம்புதுவை வாழ்வேங் கடவன்
திணியுடம்பு நீங்குந் தினம்.

திருவேங் கடவனையே சிந்தித் தொழுகுந்
திருவேங் கடவனையே சேர்ந்திங்—கொருகூற்
றுருவுடம்பாய் நிற்பதனை யொவ்வாம லெவ்வா
றருவுடம்பா யாக்கினா னாய்ந்து.

---

பாப்பாங்குளம்,

## தண்டு. பெருமாள்சுவாமிநாயுடு அவர்கள்,

பரமபதமடைந்தபோதுசொல்லிய

பதினான்குசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

பொன்னாருஞ் சாலிவா கனனென்பா யிருநூற்றில் பொருந்துமெட் டாண்டில் விபவம், பொற்றுலா மாதமிரு பத்துமூன்றபரபக் கம்பேணே காதசிக்கிர், மின்னாதி வாரநட் சத்ரமுத்திரட்டாதி மேவுமிச் சுபதி னத்தில், விண்ணா டரும்பு பூஞ் சோலைகோ புரமாட மேடைதண் பணைபல் சூழும், நன்னாட தாந்தொண்டை மண்டலத் துயரார்ய பாஷிதவே ளாள குலமால், நன்மைதரு பாப்பாங் குளத்தூரன் செங்கல்வ ராயநா யுடுசெய்தவந், தன்னில்வரு பெருமாள் சுவாமிநா யுடுமதன் தாரணிப்பெண்பென் வாஞ்சை, தவிர்த்துவிர சாநதியின் மூழ்கிவை குந்ததிரு மால்பதஞ் சார்ந்த னனரோ.

---

சதுரங்கபட்டணத்தைச்சார்ந்த மெய்யூர், மணியம்

## முனியப்ப நாயகரவர்கள்

பரம்பதமடைந்தபோதுசொல்லிய

எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

சீர்மலியும் விபவருடந் தனுசுமாதந் தேதிமூன் றமரர்குருவார மகநாள், ஏர்மலியுந் திதிசஷ்டி யபரபக்க மிதுநாளிற் சதுரங்க நகர்சேர் மெய்யூர்ப், பேர்மலியுஞ் சின்னதம்பி புத்ரபாக்யன் பெருகுபுகழ் சம்புமுனிக் குலத் தெழுந்த, தேர்மலியு மணியமுனி யப்பவள்ளல் செய்தவத்தாற் பரமபதஞ் சேர்ந்தா னன்றே.

நேரிசை வெண்பா.

செங்கமல வோடை செறியுசது ரங்கநகர்
தங்குமுனி யப்பனெனுந் தார்வேந்தன்—இங்குலகில்
நன்றாய தன்மணியந் நாட்டப் பரமபதஞ்
சென்றானே? வென்றானே? தெளிந்து.

---

ஞ௦ வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

த. தம்புசாமிபிள்ளையவர்கள் மனைவியார்,

## ஸ்ரீ சௌபாக்கியவதி மரிகருதம்மாள்மீது

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்கொள்சுதன் வருமெழிலா யிரத்தெண் ணூற்றிற் சேருமெழு பானென்பான் றிப்பியவாண்டில், ஏர்கொண்ட கார்த்திகையேழ் அட்டமிப்பூர் விலங்குசத யஞ்சுக்கிர வாரத்தோன்றல், தேர்கொண்ட கன்றபின்றை வயல்கள்சூழுந் திருத்தஞ்சைக் காராளர் குலத்தேவந்த, நார்கொண்ட மனத்தானந் தம்புசாமி னன்மனையா ளிறையுலக நாடினளே.

நேரிசை வெண்பா.

கம்பனைய கந்தரத்துக் காரிகையார் நாடுதஞ்சைத்
தம்புசாமிப்பேர்த் தனதன்மகிழ்—செம்பதுமை
யன்ன மரிகருதம் மாளமலன் பொன்னுலகை
யுன்னியடைந் தாளுடல்விட் டுய்ந்து.

---

கண்டாசிவரம்-நாராயணபிள்ளையவர்கள்

மனைவியார்,

## சௌபாக்கியவதி அக்கம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்பெருகு சர்வசித்துத் திங்கள்சித்ரை தேதியைந் திற்காரி வார நவமிப், பேர்பெருகு சிரவணநாள் முகிலுரிஞ்சும் பெருமதில்கொள் கண்டாசிவரமான் முல்லைத், தார்பெருகு பொதுவர்குலந் தழைக்கவந்த தகைநாரா யணவேளில் லக்கிழத்தி, ஏர்பெருகு நாற்குணமும் வளரக்கம்மாள் எம்பெருமா னிணையடித்தா ளடைந்தாண் மன்னோ.

நேரிசைவெண்பா.

ஆய்ந்த மனமு மருங்குணமும் வாய்ந்துலகில்
ஆய்ந்தோரை யாதரித்த அக்கம்மாள்—மாய்ந்தவுடன்
போசசுதெங்கண் மிதன்டும் பொய்யல்ல வுங்களுடன்
பேச்சுமுளவோ?சொற் பெற.

---

## வெ. வேலாயுதநாடார்பாடிய

### அரசகுலமாலைக்கு

நேரிசை வெண்பா.

கோடா வரச குலமாலை வெள்ளைய
நாடான் மீதிற்சூட்டி னன்காணும்—பாடார்ந்த
ஆலங் குளன்வெண்ணெ யுண்டவே லாயுதமா
ருலம் புகழத் தழைத்து.

## சிறுநாவூர் - கோ. சுப்பாநாயகர்மீதுபாடிய

நேரிசை வெண்பா.

சீரா ரிருசப்ப செம்மலரு ளுந்தவத்தின்
நேராருஞ் சுப்பாநாய்க் கப்புகழான்—பாராரும்
பல்வளமும் பல்லறிவும் பல்லிசையும் பல்கலையும்
நல்வளமுங் கொள்க நயந்து.

இராயபுரம் வித்துவான், வே. கி. நாராயணசாமிபிள்ளையவர்கள்

அவ்வவ்வமயங்களிலியற்றிய

செய்யுட்டிரட்டு

முற்றுப்பெற்றது.

இப்புத்தகம் வேண்டுவோர், சென்னைமாநகரம் இராயபுரம், ஆரத்தூன்வீதி முதலாவது ,கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் இந்நூலாசிரியரிடத்திலும், சென்னைமாநகரம் பெத்துநாயகன்பேட்டை பிடாரியார்கோயில்வீதி 76-வது ,கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் செ. வ. சகநாதம்பிள்ளை யவர்களிடத்திலும், புத்தகம் ஒன்றுக்கு விலை அணா-8 கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். 12 - புத்தகம் மொத்தமாகக் கேட்போருக்கு ஒரு புத்தகம் ஆதாயமாகக் கொடுக்கப்படும்.

## இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட நூல்கள்.

திருவரங்கபதிகம்.
அருணாசலீசன்பதிகம்.
தேனார்மொழியம்மைபஞ்சரத்னம்.
அய்யனார்பஞ்சரத்னம்.
திரௌபதையம்மைபஞ்சரத்னம்.
திருக்கச்சிப்பேரருளாளர்மாலை.
திருக்கச்சிவரதரந்தாதி.
சயவரதர்சதகம்.
சரஸ்வதிதோத்திரம்.
இலக்குமிபதிகம்.
சர்வசமயசமரசதோத்திரம்.
மன்மதன்சரித்திரக்கண்ணி.